TNEB
எம்ப்ளாயீஸ்
பெடரேஷன் நியூஸ்

மலர்- 4 ✧ இதழ்-7 ✧ மார்ச் 2022

நிர்வாக ஆசிரியர்
அ. சேக்கிழார்

ஆசிரியர் குழு
சு. மணிகண்டன்
J.L. பாஸ்டின் ராஜ்
S. இராமநாதன்
K. செல்வராஜூ
R. ஜெயராமன்
வீ. பாரதி

செயலாளர் (வெளியீடு)
A. செந்தில்குமார்

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com

# 48 மணி நேர வேலை நிறுத்தத்தில் பங்கேற்பீர்!

**2022** மார்ச் 14ம் நாள் தமிழகம் முழுவதும் அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலக வாயில்களிலும், சென்னை தலைமை அலுவலக வாயிலிலும் கோரிக்கைகள் முழங்கி ஆர்ப்பாட்டம் செய்துள்ளோம். தமிழகம் முழுவதும் சிறப்பாக நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி!

பிரதான கோரிக்கைகளைக் கூட வாரியமும் அரசும் கவனத்தில் கொள்ளவில்லை யெனில் அடுத்தகட்டப் போராட்டத்தை நோக்கி நகர வேண்டியிருக்கும் என்பதை தெரிவிக்க வேண்டியது நமது கடமை என்பதை உணர்கிறோம்.

01.12.2019 முதல் கிடைக்க வேண்டிய ஊதிய உயர்வு குறித்து பேசுவதற்கு வாய் திறப்பதற்கே இரண்டாண்டு ஆன நிலையிலும் தயக்கமெனில் எப்போது பேசும் வாரியம்!

ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரம், பகுதி நேரப் பணியாளர்கள் நிரந்தரம் செய்வது என்பது பாவச் செயல் என எண்ணினால் களப்பணியில் மட்டுமல்ல சுகாதாரப் பணிக்கும் வராமல் நிற்கும் நிலை வந்தால் என்னவாகும் என வாரியம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

செங்கல் சூளைகளில்தான் கொத்தடிமைகள் என கேள்விப்பட்டிருக்கிறோம். மின்சார வாரியத்தில் கேங்மேன் தொழிலாளர்களை வஞ்சிக்கும் போக்கு மாற வேண்டும். விடுப்பு இதர சலுகைகளை நீட்டித்து வழங்க வேண்டும், பயிற்சி காலத்தைக் குறைத்து சொந்த ஊருக்கு மாற்றிடல் வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை பரிசீலிக்க தயங்கியது போதும்! மார்ச் 19ல் நடைபெறும் வாரியக் கூட்டத்தில் முடிவெடுத்து உத்திரவிட வாரியம் முன் வரவேண்டும்.

தலைமை பொறியாளர் (பணியமைப்பு) பொறுப்புக்கு தகுதியான பொறியாளர்கள் இல்லை என வாரியம் முடிவெடுத்துவிட்டதா? வாரிய செயலாளருக்கு கூடுதல் பொறுப்பு வழங்கிய அடுத்த நாளே நமது ஆட்சேபணையை தெரிவித்துள்ளோம்! வாரியம் அசையாமல் உள்ளதே! என்ன காரணம்! பொறியாளர்கள் மீது தொடுக்கும் மிகப் பெரிய தாக்குதல் என்பதை எத்தனைபேர் உணர்ந்துள்ளார்கள் என்றும் கேள்விக்குறியாக உள்ளது.

செயலகப் பிரிவில் துணை செயலாளர் (Debuty Secretary) ஒருவர் விருப்ப ஓய்வில் சென்றவுடன் அப்பணியிடத்திற்குரிய பணியை இதர இரண்டு துணை செயலாளர்களுக்கு பகிர்ந்தளிக்க என்ன காரணம்! ஏன் அடுத்த சார்பு செயலாளருக்கு துணை செயலாளர் பதவி உயர்வு அளிக்கவில்லை.

செயலகப் பிரிவை நிர்வகிக்க செயலகப் பிரிவில் உள்ள துணைச் செயலாளரை செயலாளராக்க ஏன் கூடாது என்ற கேள்வி ஒரு பக்கம் எழுந்து நின்றுள்ளதே! மீண்டும் எழாது என என்ன நிச்சயம்!

நிர்வாகப் பிரிவுக்கு பொறியாளரை நியமிக்க தவறும் பட்சத்தில் எங்கள் நிர்வாகக் கிளையை நிர்வகிக்க அயலகப் பணிக்கு வந்தவருக்கு இடம் தரணுமா? ஏன் எங்களுக்கு அந்த தகுதி இல்லையா என்ற கேள்வி நிர்வாகப் பிரிவிலிருந்து எழாதா?

குட்டையைக் குழப்பி மீன்பிடிக்க எண்ணுபவர்கள் வலையை இழந்து வெறுங்கையோடு திரும்ப வேண்டி வரும் என்பதை உணர்ந்து செயல்பட்டால் அனைவருக்கும் நலம் பயக்கும் என அறிவுறுத்த விரும்புகிறோம்.

துணை மின்நிலையங்களுக்கு பதவி ஒப்புதல் தராததால் துணை மின் நிலையங்கள் தானாக இயங்குகிறது என்று பகல் கனவு காண்கிறார்கள் போல் தெரிகிறது.

இரண்டு மூன்று பிரிவுகளுக்கு கூடுதல் பொறுப்பு பார்க்கும் நிலை பிரிவு பொறியாளர்களுக்கு உள்ளதே! எத்தனை நாள் இது தொடரும்...

கணக்கீட்டு பணிக்கு, வசூல் பணிக்கு போதிய தொழிலாளர்கள் இல்லாமல் வருவாயை எப்படி பெருக்க முடியும்.

A4 தாள் வாங்கித் தருவதில் கணக்கு பார்க்கும் வாரியம் கண்ணுக்குத் தெரியாமல் நடப்பதற்கெல்லாம் காவல் நிற்குமா?...

FA, AE, TA, JA, A Dman, Assr காலியிடங்களை பூர்த்தி செய்து தரமான சேவை நடைபெற வாரியம் முன் வராவிட்டால் நட்டக்கணக்கு நீண்டு கொண்டுதான் போகும்! நட்டத்திற்கு யார் காரணம் என கண்டு கொள்ளும் வரை!

**மின்சார வாரியத்தை பொதுத்துறையிலேயே பாதுகாக்க, பெற்ற உரிமைகளை பேணி பாதுகாக்க, மார்ச் 28, 29ல் நடைபெற உள்ள 48 மணி நேர வேலை நிறுத்தத்தில் பங்கேற்று உரிமையை நிலை நாட்டுவோம்!**

**- ஆசிரியர்**

**அன்பிற்கினிய தோழர்களே! வணக்கம்.**

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில செயற்குழுக் கூட்டம் 2022 பிப்ரவரி 26 மற்றும் 27 தேதிகளில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஹோட்டல் அஜந்தாவில் மாநிலத் தலைவர் தோழர் S. மணிகண்டன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பீகார் மாநில மின்சாரத் தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், அகில இந்திய அளவில் மின்சாரத் தொழிலாளர்களின் நலன் காக்க போராடியவருமான தோழர் சக்ரதார் பிரசாத் சிங் அவர்கள் 21.02.2022ல் மறைந்ததிற்கும், ரஷ்யா, உக்ரைன் போரில் உயிரிழந்தவர்களுக்கும், மின்விபத்துகளால் பாதிப்படைந்து உயிரிழந்துள்ள தோழர்களுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் செயற்குழு ஒரு நிமிடம் மௌனம் கடைப்பிடித்தது.

தலைவர் தனது தலைமை உரையில் கடந்த டிசம்பரில் நடைபெற்ற மாநில பொதுக்குழுவிற்கு பின்னர் நடைபெற்றுள்ள இயக்க ரீதியான பணிகளையும், நாட்டு நடப்புகளையும், மாநில, தேசிய, உலக அரசியல் நிலவரங்களையும் குறிப்பிட்டு மின்சாரத் தொழிலில் தொழிலாளர், பொறியாளர் மற்றும் அலுவலர் நலன் காக்க நாம் மேலும் முனைப்புடன் செயலாற்ற வேண்டிய கடமைகள் குறித்து பேசினார்.

பொதுச்செயலாளர் தனது உரையில் பொதுக்குழு தீர்மானங்கள், வாரியத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை குறித்தும், மத்திய அரசன் கட்டுப்பாட்டில் உள்ள பாண்டிச்சேரி, சண்டிகர் மாநிலங்களின் மின்துறையை தனியார் மயமாக்க எடுத்த நடவடிக்கைகளையும் இவற்றை முறியடிக்க அகில இந்திய அளவில் நடைபெற்ற போராட்டங்கள் குறிப்பாக பிப்ரவரி 1ம் தேதி தமிழக முழுவதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் மின்சாரத் தொழிலாளர்களிடம் உள்ள ஒற்றுமையை குறித்தும் குறிப்பிட்டு பேசினார்.

கேங்க்மேன்களுக்கான போராட்டத்தை முன்னெடுக்க பிப்ரவரி 9ம் நாள் கோரிக்கை நாள் கடைப்பிடித்து போராட அறைகூவல் வெளிப்படுத்தியிருக்கிறோம் என்றும் மத்திய தொழிற்சங்கங்கள் விடுத்துள்ள மார்ச் 28, 29 வேலை நிறுத்த போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அவசியம் குறித்தும் பேசினார்.

2022ம் ஆண்டிற்கான உறுப்பினர் சந்தா, நன்கொடையில் கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு மேலும் சிரத்தையுடன் செயல்படக் கேட்டுக் கொண்டார்.

மாநில பொருளாளர் 2021ம் ஆண்டிற்கான வரவு செலவு முடித்து அனுப்பிய கிளைகளுக்கு நன்றி தெரிவித்ததுடன் அனுப்பாமல் உள்ள கிளைகளை உடன் அனுப்பிட கேட்டுக் கொண்டார்.

கட்டிடநிதி அனுப்பிட வேண்டிய கிளைகள் உடன் அனுப்பிட கேட்டுக் கொண்டதுடன் 2022ம் ஆண்டு உறுப்பினர் சந்தா தொகை மே மாதத்திற்குள் அனுப்பிட கேட்டுக் கொண்டார்.

செயல்தலைவர் திரு. R. ஜெயராமன் அவர்கள் மாநில செயற்குழு விவாதங்கள் சிறப்பாக அமைந்திட கேட்டுக் கொண்டதுடன் பொதுக்குழு முடிந்து புதிதாக பொறுப்பேற்றுள்ள நிர்வாகிகள் யாவரும் அமைப்பை உறுதிப்படுத்திட வேண்டிய அவசியம் குறித்து உரையாற்றினார்.

அமைப்புச் செயலாளர் திரு. K. நாராயணமூர்த்தி மாநில முழுவதும் கிளைகள் சிறப்புடன் இயங்கிட வேண்டிய அவசியம் குறித்தும் அமைப்பை வலுப்படுத்துவதற்கு தேவையான ஆலோசனைகளும் வழங்கி சென்னை வடக்குத் திட்டத்தின் முன்னேற்றத்திற்கு காரணமான அனைத்து செயல்திட்டங்களையும் விரிவாக விளக்கிப் பேசினார்.

வெளியீட்டுச் செயலாளர் திரு. A. செந்தில்குமார் ஆண்டு சந்தா, ஆயுள் சந்தா விபரங்களை குறிப்பிட்டு பேசியதுடன் 2022 மார்ச் இறுதிக்குள் வருகின்ற ஆண்டு சந்தாவிற்கு எடுத்துக் கொள்ள முடிவெடுத்துள்ளதால் சந்தாதாரர்களின் முகவரிகளை விரைவாக அனுப்பிட கேட்டுக் கொண்டார்.

செயற்குழு உறுப்பினர்களின் விவாதத்திற்கு பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## தீர்மானங்கள்

**1) தமிழக உள்ளாட்சித் தேர்தலில் மிகப் பெரும் வெற்றியை பெற்றிருக்கக் கூடிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சிக்கு தேர்வு செய்யப்பட்டிருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவிக்கிறது.**

**2) ரஷ்யா உக்ரைன் நாட்டின்மீது தொடுத்துள்ள போரை நிறுத்திட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

**3) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் காலியாக உள்ள தலைமை பொறியாளர் (பணியமைப்பு) பதவிக்கு கூடுதல் பொறுப்பு வாரிய செயலாளருக்கு அளித்து உத்தரவிட்டுள்ளதை ரத்து செய்து பொறியாளருக்குண்டான பதவியான தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) காலி இடத்தை பூர்த்தி செய்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.**

**4) 01.12.2019 முதல் அளிக்கப்பட வேண்டி ஊதிய உயர்வுக்கான பேச்சுவார்த்தையை உடனடியாக துவக்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது. இடைப்பட்ட காலத்திற்கு இடைக்கால நிவாரணமாக மாதம் ரூ. 3000.00 கணக்கிட்டு வழங்கிட இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.**

**5) 480 நாட்கள் பணி முடித்து வேலை கேட்டு தொழிலாளர் ஆய்வாளர் மற்றும் நீதிமன்றங்களில் 1981 Tamil Nau Industrial establishment conferment of perrmanent status to workmen Act படி மின்வாரியத்தில் பணிநிரந்தரம் வழங்கிட நீதிமன்ற உத்தரவை அமல்படுத்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.**

**6) ஒப்பந்த தொழிலாளர்கள் நிரந்தரம் குறித்து அடையாளம் காண நடைமுறையில் இருந்த BP. No. 9 நாள் 09.01.2008ஐ முன்னால் வாரியத் தலைவர் திரு. பங்கஜ்குமார் பன்சால் காலத்தில் ரத்து செய்ததை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வந்து ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.**

**7) ஊதிய உயர்வு ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரம் கேங்க்மேன் கோரிக்கைகள், சுகாதார பணியாளர்கள் நியமனம், தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) பதவிக்கு வாரிய செயலாளருக்கு கூடுதல் பொறுப்பு வழங்கியதை ரத்து செய்து தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) நியமித்தல், அடிப்படை பதவிகள் காலியிடங்களை நிரப்பிடுதல் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி 14.03.2022**

அன்று தமிழகம் முழுவதும் உள்ள மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு மாலை 5.20 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடத்துவது என இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

8) கேங்க்மேன் பணியாளர்களுக்கு பிப்ரவரி 9ம் நாள் கோரிக்கை நாளில் கோரியுள்ள அனைத்து கோரிக்கைகளையும் உடன் நிறைவேற்றிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

9) மார்ச் 28 அன்று 29 தேதிகளில் நடைபெற உள்ள அகில இந்திய வேலை நிறுத்தத்தில் பங்கு எடுப்பது என இச்செயற்குழு தீர்மானித்து வேலை நிறுத்த அறிக்கை அளித்திட தலைமைக்கு அதிகாரம் அளிக்கிறது.

10) பிரிவு அலுவலகங்களுக்கு சுகாதார பணிக்கு பணியாளர்கள் நியமிக்கப்படாமல் உள்ள சுமார் 1000 அலுவலகங்களுக்கு ஏற்கனவே ஊதியமின்றி பணியாற்றிக் கொண்டிருப்பவர்களை பணியமர்த்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

11) மின்சார வாரியத்தில் உள்ள காலி பணியிடங்களை நிரப்பிட இதுவரை வாரியம் தேர்வு செய்து வந்த முறையை மாற்றி TNPSCக்கு மாற்றிட அரசு அறிவித்துள்ளதை மாற்றி மின்சார வாரியமே காலி பணிடங்களை நிரப்பிடும் முறையை தொடர வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தையும், தமிழக அரசையும் கேட்டுக் கொள்கிறது.

12) பங்களிப்பு ஓய்வூதியம் Contributed pension schemeல் 2003க்கு பிறகு பணியேற்றவர்களுக்கு பிடித்தம் செய்யப்பட்டுள்ளதில் முன்பணம் (கடன்) கோருபவர்களுக்கு அளித்திட தேவையான அனுமதி தமிழக அரசிடம் பெற்றிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

13) மதுரை மெட்ரோ மற்றும் மதுரை மின்திட்டத்தில் உள்ள நிர்வாகப் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வர மதுரை மண்டல செயலாளர் திரு. K.R. சுப்ரமணியன், மாநில செயலாளர் திரு. R. மூக்கையா, மாநில செயல் தலைவர் திரு. R. ஜெயராமன் ஆகியோர் கொண்ட குழுவை இச்செயற்குழு நியமிக்கிறது. இக்குழு ஒருமாத காலத்தில் மதுரை மெட்ரோ மற்றும் மதுரை மின்திட்டத்தில் உள்ள செயற்குழு உறுப்பினர்களின் கருத்தறிந்து அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

14) திருப்பூர் மின்வட்டம் அவினாசி கோட்டம் செயற்பொறியாளர் கடைப்பிடித்து வரும் தொழிற்சங்க விரோத நடவடிக்கைகளையும் நிர்வாக அத்துமீறலையும் நிறுத்தாவிடில் செயற்பொறியாளர்மீது நடவடிக்கை எடுக்கக் கோரி வாரியத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வது என இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

15) துறைத்தேர்வு எழுதியுள்ளவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் ஊதியத்தில் ஆண்டுயர்வு வழங்கி வந்ததை நிறுத்தியுள்ளதை மீண்டும் வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

16) தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) அலுவலகத்தில் உள்ள Inspection teamஐ ஆய்வு பணிக்கு அனுப்பிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

17) முறைப்பணியில் (Shift) பணியாற்றுபவர்களுக்கு இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமை விடுப்பு அளித்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

18) Metur workshopல் நடக்கும் தனியார்மயப்படுத்தும் பணிகளை நிறுத்த வேண்டும், தளவாட பொருட்கள் வழங்கி உற்பத்தியை பெருக்கிட தகுந்த நடவடிக்கைகள் எடுத்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

19) கள்ளக்குறிச்சி மின்வட்டம் சங்கராபுரம் மேற்கு உதவி செயற்பொறியாளர் திரு. P. வேலுமணி அவர்கள் திரு. A. வெள்ளையன் பண்டக சாலை மேற்பார்வையாளர் மீது கொண்டுள்ள தனிநபர் காழ்ப்புணர்ச்சியையும் தொழிற்சங்க விரோத செயல்பாடு குறித்தும் மேற்பார்வை பொறியாளருக்கு அனுப்பியுள்ள புகார்மீது தகுந்த விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கத் தவறினால் வாரியத்தின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

20) தஞ்சாவூர் மின்திட்ட செயலாளர் திரு. N. சீனிவாசன் நாகப்பட்டினம் மின்திட்டத்திற்கு மாறுதலில் சென்றுவிட்டதால் மாநில உபதலைவர் திரு. K. செல்வராஜ் அவர்கள் தலைமையில் 25.02.2022 அன்று தஞ்சையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் புதிய நிர்வாகிகளை தேர்வு செய்யப்பட்டுள்ள தலைவர் திரு. P. மோகன்தாஸ் பண்டக சாலை அலுவலர் (ஓய்வு), செயலாளர் திரு. M. ராஜா இளமின்பொறியாளர் 2ம் நிலை, பொருளாளர் திரு. V. கனகராஜ் இளமின்பொறியாளர் 2ம் நிலை, அமைப்புச் செயலாளர் திரு. T. கருணாநிதி கம்பியாளர் ஆகியோரை இச்செயற்குழு முழுமனதாக அங்கீகரித்து சிறப்பாக செயல்பட வாழ்த்துகளையும் இச்செயற்குழு கிளை நிர்வாகிகளுக்கு தெரிவிக்கிறது.

21) ஈரோடு மின்வட்டச் செயலாளர் திரு. M. பாஸ்கரன் அவர்கள் உடல்நலக் குறைவினால் பதவி விலக விருப்பம் தொடர்ந்து கடந்த 24.02.2022 அன்று ஈரோடு ஆயிரவைசியர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட கிளை நிர்வாகிகள் தலைவர் திரு. N. அம்மாசி சிறப்பு நிலை ஆக்க முகவர், செயலாளர் திரு. R.P.A. நந்தக்குமார் வணிக ஆய்வாளர், பொருளாளர் திரு. M. சிவக்குமார் சிறப்புநிலை ஆக்க முகவர், செயல் தலைவர் திரு. V. சிவக்குமார் ஆக்க முகவர் முதல் நிலை, அமைப்புச் செயலாளர் திரு. M. பாஸ்கரன் இளநிலை பொறியாளர் (ஓய்வு) மற்றும் திட்ட கோட்ட நிர்வாகிகளை இச்செயற்குழு அங்கீகரிக்கிறது. நிர்வாகிகள் சிறப்புடன் பணியாற்ற இச்செயற்குழு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

22) மின்சார வாரியத்தில் பதவி உயர்வில்லாமல் 11 ஆண்டுகளுக்கு மேலாக கணக்கு மேற்பார்வையாளர் பொறுப்பில் பணியாற்றுபவர்களுக்கு பதவி உயர்வு தேக்க நிலை தீர்க்கும் அளவில் கணக்குப் பிரிவில் சுமார் 24 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிபவர்களுக்கு இப்பதவி கிடைத்திட உதவி கணக்கு அலுவலர் (NI) பதவியினை உருவாக்கி அளித்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

செயற்குழு முடிவுகளை நடைமுறைப்படுத்த தேவையான ஆலோசனைகளை தெரிவித்து தலைவர் உரையாற்றிய பின்னர் செயற்குழு இனிதே நிறைவுற்றது.

நன்றி!

தோழமையுள்ள,

(A. சேக்கிழார்)
பொதுச்செயலாளர்

சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 8

# ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காண்!

## தகர்த்திடுவோம்! பாலின பாகுபாட்டினை!

## (Break the Bias)




**சு. மணிகண்டன்,** மாநில தலைவர், ✆ : 9994659197

**கே**ரளப் பெண் ஒருவர் தன்னந்தனியாக, இந்தியா முழுவதும் பயணித்து, ‘‘இந்தியா பெண்களுக்கு பாதுகாப்பான நாடு’’ என்று செய்தியை உணர்த்துகிறார்.

உக்ரேன் நாட்டு யுத்தகளத்தில், ஒரு ரஷ்ய ராணுவ வீரரைப் பார்த்து, நேருக்கு நேராக கை நீட்டி, ‘எங்கள் நாட்டில் உங்களுக்கு என்ன வேலை?’ என்று சீறுகிறாள்.

கடனில் மூழ்கிய ‘காபி டே’ நிறுவனத்தின் நிர்வாகத்தை தானே கையில் எடுத்து, புது வியூகத்துடன் வெற்றி கண்டு, மீட்டுக் கொணர்ந்தார். ஒரு பெண்.

எது நேரினும் சரி...! எது வரினும் சரி..! என்று தீர்மானத்துடன், அஞ்சாமல் நினைத்த காரியத்தை சாதிக்கிறாள், பெண்.

ஆயுதமேந்திய வலியவன் ஒருவனை துச்சமாகக் கருதி, மோதி மிதித்துவிடத் துடிக்கிறாள் ஒரு மங்கை.

ஆண் தோற்றுப்போய், கோழைத்தனமாக தன் இன்னுயிரைப் போக்கிய நிலையில், அசாத்திய துணிச்சலுடன் ஜெயித்துக் காட்டுகிறாள் அவன் மனைவி.’ இவற்றைக் கண்ணுறும்போது, ‘எங்கிருந்து வந்தது பெண்களுக்கு இந்தத் துணிச்சல்...’ என்று கேட்பதுகூட ஆணாதிக்கச் சிந்தனைதான்.

‘இத்தனை தைரியத்தை எங்கே இத்தனை நாள் மறைத்து வைத்திருந்தார்கள்?’ என்று கேட்பது தான் சரியான வினா.’

மறைந்து போன, ஆதிகாலத்து தாய்வழிச் சமூகம், தனது இரண்டாவது வெர்ஷனைத் தொடங்கிவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

வாய்ப்புகள் வழங்கப்பட்டால்...

ஊக்கம் ஊட்டப்பட்டால்...

வழிகாட்டல் தென்பட்டால்...

வானளாவ சாதிப்போம் என்று அல்லவா சூளுரைக்கிறார்கள், பெண்கள்!

இங்கே இந்த கட்டுரை எழுதும் நேரத்தில் தமிழகத்தின் சரிபாதி நகரங்களை, பெண்கள் தங்கள் ஆளுகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

வணக்கத்திற்குரிய மேயர்களாக - நகரசபை சேர்மன்களாக - பேரூராட்சித் தலைவர்களாகி செங்கோல் ஏந்தி, பிரத்யேக அங்கியுடன், பொன்மாலை சூடி, அரியாசனங்களில் அமர்கின்ற காட்சியை நாம் காண்பதே ஓர் அழகியில் அனுபவம்தான்.

வெற்றி பெற்றவர்களைவிட, அதைத் தவறவிட்ட பெண்களை மெத்தப் பாராட்டலாம். தோல்வியை இயல்பாக எடுத்துக் கொண்டு, தங்கள் சகஜ வாழ்க்கைக்கு திரும்பிவிட்ட, இந்தத் தன்னம்பிக்கைப் பெண்கள் நம்மை மலைக்க வைக்கிறார்கள்.

இந்த உலகை அன்புப் பூக்களால் அலங்கரிப்பவர்கள், நம்பிக்கை நறுமணத்தையும் பரப்புகிறார்கள். பெண்களுக்கு சாதி பேதம் கிடையாது. மத வெறி கிடையாது. வர்க்க வேற்றுமை கிடையாது. சக உயிரை ஒரு மனிதனாக / மனுஷியாக மட்டுமே பார்க்கிறாள் பெண். அவளைப் போற்ற வேண்டாமா? அவளைக் கொண்டாட வேண்டாமா?

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் இயக்கம், தனது மகளிர் உறுப்பினர்களுக்கு உரிய அங்கீகாரத்தை மறுக்காமல் வழங்குகிறது. TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் இயக்கத்தின் கூட்ட அரங்குகளில் ‘பெண் சக்தி-க்கு கூடுதல் முக்கியத்துவம் உண்டு. TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் இயக்க பெண் தளபதிகள், தங்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை சிரமேற்கொண்டு, முடித்து முத்திரை பதிக்கிறார்கள் என்பது நிஜம்.

‘‘நிலையான நாளைய பாலின சமத்துவம் இன்று! (Gender Eqauality Today for a Sustainable Tomorrow) என்பது, இந்த 2022-ம் ஆண்டிற்கான உலக மகளிர் தின கருப்பொருள்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, முன் எப்போதையும் விட, பெண்கள், ‘ஜிகு, ஜிகு’-வென ஒரு நீராவி என்ஜினின் பாய்ச்சலுடன் வெகு துடிப்போடு இருக்கிறார்கள். அவர்கள் முன்னேறத் தேவை வாய்ப்பும், வழிகாட்டலும், ஊக்கமும்தான். பொருளாதார சுயசார்பு வந்துவிட்டாலே, பாலின சமத்துவம் என்பது இயல்பாகவே உருவாகி விடும் அல்லவா?

உரிமைகளுக்காகவும், பிரச்சனைகளுக்காகவும் மட்டுமே பெண்கள் குரல் கொடுத்துக் கொண்டிருப்பது போதும்! அவை மட்டுமே பெண்களுக்கு உயர்வைக் கொடுத்துவிடாது! இனி, அடுத்த இலக்குகளை தீர்மானித்து நடைபோட வேண்டும்!

இதோ இந்தக் காலத்திலும், 90 விழுக்காடு பெண்கள் விவசாயக் கூலிகளாகவும், ஆலைத் தொழிலாளர்களாகவும் மட்டுமே தங்கள் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அறிவாற்றலும் செயல்திறனும் வெளிக்கொணரப்படாமலே மங்கி மறைந்து விடுகிறது.

வெறுமனே எந்திரம் போல உழைப்பதும், அதனைச் சார்ந்து ‘வாழ்வதும்’ மட்டுமே பிறவிப் பயன் அல்ல. நாம் காணும் இலட்சிய உலகமும் அது அல்ல.

கட்டிடத் தொழிலோ, கார்மெண்ட் பிசினஸோ, அங்கே வேலை செய்யும் ஒரு ஆணுக்குக் கிடைக்கும் பயிற்சி - பட்டறிவு - அந்தஸ்து பெண்களுக்கு சென்று சேர வேண்டும். அதற்குத்தான் இந்த சமூகம் உழைக்க வேண்டும்.

உழைக்கும் பெண்களை திறன் சார்ந்தவர்கள் மிளிரச் செய்ய வேண்டும். ஆற்றல் மிக்கவர்களை தலைமைப் பொறுப்பேற்கச் செய்ய வேண்டும். ஆர்வம் உள்ளவர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்க வேண்டும்.

'உழைப்பு' என்று களம் இறங்கும் எந்தப் பெண்ணும், தான் விரும்பும் - அல்லது ஈடுபட்டிருக்கும் தொழிலில் தன்னை ஒரு புலமை மிக்கவராக ஆக்கிக் கொள்ள வேண்டும். இதற்கு அந்தத் துறைசார்ந்த 'மகளிர் குழு'க்களின் உதவி கிட்ட வேண்டும்.

மதுரையில் அழகு நிலையம் நடத்தும் 300 பெண்கள் ஒன்று சேர்ந்து ஒரு 'அசோஷியேஷன் நடத்துகிறார்கள். தேவையான பொருட்களை அவர்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்கிறார்கள். புதிய தொழில் நுட்பங்களை 'வாட்ஸ்ஆப்-பில் பகிர்ந்து கொள்கிறார்கள். இணைந்தே உழைக்கிறார்கள். இணைந்தே ஜெயிக்கிறார்கள்.

இந்த விஷயத்தில், அரசாங்கத்திற்கும் பொறுப்பு உண்டு. வெறுமனே கைவினைப் பொருட்கள் பயிற்சி அளிப்பதோடு, தனது கடமையை முடித்துக் கொள்ளாமல், தமிழகத்தின் பிரபலமாக விளங்கும் எல்லாத் தொழில்களிலும் உள்ள அடிப்படை அறிவை, பெண்கள் நேரடியாகத் தெரிந்து கொள்ள, ஆங்காங்கே பயிற்சிப் பட்டறைகள் நடத்த வேண்டும்.

தமிழகத்தில் பெண் தொழிலாளர்களை சாதாரண உதவியாளர்களாகவே வைத்துக் கொண்டிராமல், இனியாவது, அவர்களை

திறன் சார்ந்தவர்களாக - ஈடுபடும் தொழிலின் அடிப்படை அறிவு பெற்றவர்களாக - பணித்தளத்தில் தலைமையேற்பவர்களாக மாற்றுவோம்!

அவ்வண்ணம் நிகழ்ந்தால் நாளைய நாட்களில் உழைக்கும் பெண்கள் எல்லோரும் ஆண்களுக்கு நிகரான மரியாதையுடன் தலைநிமிர்ந்து வலம் வருவார்கள்!

'ஆளப் போறான் தமிழன்!' - இது ஆணாதிக்கம் கொண்ட இதயங்களின் ஆவேசம்!

'ஆளப் போறாள் தமிழச்சி! என்பது தான் தொழிற்களத்திலும், சமூக வீதியிலும் நாளை நாம் காணப் போகும் எதார்த்தம்.

மகளிர் தின வாழ்த்துகள்!



## பெண்ணே...

உலகத்திற்கு உருவம் கொடுத்தவள்
உருவத்திற்கு உயிர் கொடுத்தவள்
உயிருக்கு உதிரம் கொடுத்து
அன்பாய், பண்பாய், பாசமாய்
செதுக்கியவள்
''அம்மா'' என்ற அழைப்பில்
கடவுளாக என்றும் இருப்பவள்
வாழ்க! வாழ்க!

**ம. பத்மாவதி**
உதவி நிர்வாக அலுவலர்
சேலம் மேற்கு கோட்டம்




# உலக மகளிர் தினம்

**கவிஞர். ப. சித்ரா**
முதல்வர், கிருஷ்ணா கல்வியியல் கல்லூரி, திருவண்ணாமலை
✆ : 8072628209



அல்லும் பகலும் அயராது பாடுபடும் பாவைகளுக்கும், முட்புதர்களில் மண்டி கிடக்கும் புத்தம்புது ரோசாவைப் போல் பூத்துக்குலுங்கும் குலவிளக்குகளுக்கும், காட்டாற்று வெள்ளம் போல் காடுமேடு பாராமல் வாழ்க்கை ஓட்டத்தை ஓய்வில்லாமல் கழித்து காலம் தள்ளும் தன்னலமற்ற தங்கத்தாரகைகள் அனைவருக்கும் உலக மகளிர் தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாளும் கிழமையும் நலிந்தோர்க்கு இல்லை ஞாயிற்றுக்கிழமை பெண்களுக்கு இல்லை என்ற கூற்றுக்கிணங்க கால நேரம் கருதாமல் எந்நேரம் பாடுபட்டுக் கொண்டிருக்கும் பெண்களே! இந்நாட்டின் கண்கள். உங்கள் தியாகத்தை மதித்து போற்றி வாழ்த்துக்களும் நன்றியும் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஐரோப்பியர்களின் வருகையைத் தொடர்ந்து மகளிர்கள் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது என்றால் யாரும் மறுக்க இயலாது. அதுமட்டுமல்லாது கலப்புமணம், காதல் மணம், விதவை திருமணம் ஆகிய சமூக நிகழ்வுகளை அறிஞர் அண்ணாவின் படைப்புகள் ஊக்குவித்தன.

பெண்களின் வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் வழிகாட்டின. அண்ணாவின் ஒவ்வொரு எழுத்திலும் மகளிர் மேம்பாடும். கருத்துக்களும் விரவி இருப்பதை எல்லோரும் அறிவர்.

பெண்களுக்கு ஏற்படும் பலவகை சிக்கல்களுக்கும் அண்ணா தம் படைப்புகளில் தீர்வு கூறியுள்ளார். அண்ணாவின் படைப்புகளில் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் அங்கெல்லாம் மகளிர் முன்னேற்றமும் பேசப்பட்டுள்ளது காணலாம். அண்ணாவின் படைப்புகள் மிகப் பரந்து விரிந்தது ஆகும். அவர் மாபெரும் தமிழ் கனவு அவர் இயற்றிய சிறுகதைகளிலும் நாடகங்களிலும் புதினங்கள் இன்னும் பெண்களுக்கான உரிமை பேசப்படுகிறது. பெண்களின் மீது திணிக்கப்படும் அடிமைத்தனம் பேசப்படுகிறது. மூடநம்பிக்கைகள் துரத்தப்படுகிறது. நாடு விடுதலை பெற்ற பின்னும் பெண் விடுதலை பெறாத நிலையில் பெண் உரிமை, பெண் கல்வி, விதவை மறுமணம், பெண் விடுதலை ஆகியவற்றைப் பற்றி அண்ணாவின் படைப்புகள் தரும் எழுச்சி முத்தாய்ப்பானவை. அடிமைப்பட்டிருந்த பெண்ணினம் விடுதலை பெற போராடியவர்களில் பெரியார் ஈவேரா முதன்மையானவர். அவருடைய கொள்கை பரப்பும் பணியில் அறிஞர் அண்ணா ஈடுபட்டு இருந்த காரணத்தினால் பெரியார் கூறி வந்த கருத்துக்களையெல்லாம் தன் படைப்புகளின் மூலம் வெளிப்படுத்துகிறார் அண்ணா. அண்ணாவின் தனி ஆளுமையே பெண்களின் விடுதலை தான். பெண்ணடிமைத் தனத்தின் பின்புலம் என்னும் இயலில் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், சமய இலக்கியங்கள், சாத்திர நூல்கள், பழமொழிகள் ஆகியவை பெண்ணடிமைத்தனத்தை நயமாகவும் நாகரீகமாகவும் வலியுறுத்தும் பான்மையை விலக்கும் என்றால் மிகையாகாது.

அண்ணாவின் படைப்புகள் உணர்த்தும் பெண்விடுதலை என்னும் இயலில் பெண்கள் தம்மை சிக்கலிலிருந்து விடுதலை பெறுவதற்கு அண்ணா சொல்லிய தீர்வுகள் ஏராளம் தாராளம். சீர்திருத்த சிந்தனையாளர்களின் அறிவுரைகளை படிப்பதும் இல்லை கடைபிடிப்பதும் இல்லை என்பது என்பதுதான் நடைமுறை உண்மை.

விதிவிலக்குகள் இருக்கலாம் பொதுபுத்தி தான் மேலோங்கி இருக்கிறது. பெண்ணடிமைத் தனம் திடீரெனத் தோன்றியது அன்று பழம்பெரும் காப்பியங்களிலும் சமய இலக்கியங்களிலும் சாஸ்திரங்களிலும் பெண்களை அடிமைகளாக நடத்த வேண்டும் என்ற கருத்து நயமாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. தாய்வழிச் சமூகம் கட்டமைப்பை உடைத்து ஆணாதிக்கச் சமூகத்தை உருவாக்கியதில் சமய இலக்கியங்கள் பெரும் பங்கு வகித்துள்ளனர். தொல்காப்பியம் முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் தமிழர் தம் வாழ்வியலை விளக்குவதாக அமைந்துள்ளது. பெண்களுக்கு இயல்பாக அமைய வேண்டியவை அச்சம், நாணம், பேதமே ஆகிய மூன்று குணங்களாகும் என்பதனை ''அச்சமும் நாணும் மடனுமுந் துறுதல் நிச்சமும் பெண்பாற் (கு)உரிய என்ப'' என்ற நூற்பா மூலம் விளக்கி பெண்ணடிமைத்தனத்தை நாகரிகமாக சுட்டியுள்ளது 'உரிய என்ப' என்பதனால் அது அவர் கருத்து அன்று என்று தெரியவருகின்றது.

''உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றென தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு காமக் கிழவனுள்வழிப் படினுந் தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும் ஆவகை பிறவும் தோன்றும மன் பொருளே'' எனும் நூற்பாவில் பெண் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு சொல்லப்படுகின்றது.

பெண்களுக்கு மட்டும் கற்பை வலியுறுத்தி ஆண்களுக்கு பரத்தையிற் பிரிவைக் கூறியிருப்பதில் இருந்து இருபாலருக்கும் மாறுபட்ட நீதி இருத்தலை உணரமுடிகின்றது.

*''வினையே ஆடவர்க்கு உயிரே; வாண் நுதல் மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்''.*

என்று குறுந்தொகை பாடல் பெண்களின் உயிர் கூட ஆண்கள் தான் என்று நூல்களும் கருதுதற்குரியது.

**இலக்கியங்கள்**

தன் கணவனை பரத்தை வீட்டுக்கு தூக்கிச் சென்ற நளாயினி பெரும் கற்புடையவள் எனப் போற்றப்படுகின்றாள். தன்னை பற்றி சிந்திக்காது ஆணின் விருப்பு வெறுப்புகளை உணர்ந்து நடந்தவள் பதிவிரதை என போற்றப்படுகிறாள். அந்த இலக்கியங்கள் பாடியவர்கள் ஆண்கள். 5 பேரை மணந்த பாஞ்சாலி ஐவருக்கு பத்தினி என புகழப்பட்டார். பந்தயப் பொருளாக பட்ட கடனுக்காக மனைவியை விற்ற அரிச்சந்திரன் உண்மையின் பிறப்பிட என புகழப்பட்டார். நளன் தன் மனைவியை பற்றி கவலை கொள்ளாது நள்ளிரவில் காட்டில் விட்டு பிரிந்தான். பெரியபுராணத்தில் இயற்கை நாயனார் தன் மனைவியை சிவனடியார் உடன் அனுப்பி வைக்கிறார். காலங்காலமாக பெண்கள் அடிமைத் தனமாகவே இருந்து வாழ்ந்தது என்பது இலக்கியங்கள் கூறும் உண்மை.

**சாத்திர நூல்கள்**

கணவன் காமுகனாகவும், ஒழுக்கம் கெட்டவனாகவும், நல்ல குணங்கள் அற்றவனாகவும் இருப்பினும் கூட மனைவி அவனை தெய்வமாக மதித்து நடந்துகொள்ள வேண்டும்.

கணவனுடைய சொல்லைத் தட்டாது நடப்பதே மனைவியின் உயர்ந்த தர்மம், வேள்வி, சடங்கு, நோன்பு முதலியன பெண்களுக்கு உரியது அல்ல. கணவனுக்கு தொண்டு செய்வதனாலேயே வானுலகத்தில் அவளுக்கு உயர்ந்த பதவி கிட்டும். கணவன் உயிருடன் இருக்கும்போது சடங்கு நோன்பு முதலியவற்றை கடைப்பிடிக்கும் மனைவி கணவனது வாழ்நாளை குறைத்து விடுகிறாள். அதனால் அவளுக்கு நரகம்தான் கிடைக்கும். பெண்கள் புண்ணியத் தலங்களுக்குச் சென்று தீர்த்தமாடுவது வீணான செயலே.. அதற்கு பதிலாக கணவனது பாதத்தையோ உடம்பையோ கழுவி, அந்நீரை குடிப்பது மேலான செயல். அப்படி குடிப்பதால் பெண்களுக்கு மேலான பதவி கிட்டும். கணவனைக் காட்டிலும் மேலான உலகம் மனைவிக்கு கிடையாது. கணவனுக்கு மாறாக நடக்கிற பெண்ணுக்கு கணவன் சென்ற உலகம் கிட்டாது. எனவே, எக்காரணத்தைக் கொண்டும் மனைவி அவனுக்கு எதிராக நடத்தக்கூடாது. கணவனை மதியாது பிறந்த வீட்டையே பெருமைப்படுத்தி பேசிக்கொண்டிருக்கும் பெண்ணை அரசன் பெரிய கூட்டத்தின் நடுவில் நிறுத்தி நாய்க்கு இரையாக்க வேண்டும். கணவன் சொல்லை மதியாது நடக்கும் பெண் பரிமாறிய உணவை ஒருவரும் உண்ணக்கூடாது. அவளை விபச்சாரியாக கருத வேண்டும். நோயாளியாகவோ குடிகாரனாக தீய பழக்கங்கள் உடையவனாகவும் கணவன் இருப்பினும் அவனுக்கு மனைவி கீழ்ப்படிதல் வேண்டும். அங்ஙனம் கீழ்ப்படிந்து நடக்காதவளை ஆடையாபரணங்களைப் பறித்துக்கொண்டு, சமுதாயத்திலிருந்து மூன்று மாத காலம் விலக்கி வைக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்படும் கருத்துக்கள் அனைத்தும் பெண்ணை இழிவுபடுத்துவனவாகவே உள்ளன.

திருக்குறளில் காணப்படும் பெண்வழிச்சேறல் என்ற அதிகாரமும் பெண்ணடிமைத்தனத்தை மறைமுகமாக வலியுறுத்துகிறது.

''இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற்று எஞ்ஞான்றும் நல்லார்க்கு நல்ல செயல்'' என்ற குறளில் மனைவியின் பேச்சைக் கேட்கும் கணவனை விட ஏவல் செய்கிற நாணமுள்ள பெண்ணே பெருமை கணவனிட உடையவள் என்றும் பெண்ணடிமைத்தனம் பேசப்பட்டுள்ளது.

மற்ற நீதி நூல்களும் ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி என்ற கருத்தை வலியுறுத்துவனவாகவே அமைந்துள்ளன.

தையல் சொல் கேளேல் என்று அவ்வையாரே சொல்லிவிட்டார். பெண்ணுரிமை எங்கே பெண்ணடிமைத் தனம் என்பது பெண்ணின் தனிப்பட்ட பிரச்சனை அல்ல அது சமூக பிரச்சனை இதனை வேரறுக்க வேண்டியவர்கள் பெண்கள் மட்டுமல்ல. ஆண்களும் தான் வரதட்சணையால் கலங்குபவள் பெண் மட்டுமல்ல, அவளைப் பெற்ற தந்தையும், உடன் பிறந்த சகோதரன் கூடத்தான் என்ற எதார்த்தத்தை மறுக்கமுடியாது. ஆண், பெண் இருபாலரையும் சமநிலையில் பார்த்து சிந்தித்தவர்கள் இராஜாராம் மோகன்ராய், காந்தியடிகள், பாரதியார், தந்தை பெரியார், பாரதிதாசன், அறிஞர் அண்ணா போன்றோர் ஆவர்.

ஜாதிபேதம் தீண்டாமை ஆகியவற்றுக்கு எதிராகப் பெரியாரும் அண்ணாவும் முன்மொழிந்த சமூகநீதி தத்துவத்தின் பெண்ணுரிமையும் அடங்கும்.

இலக்கணம், காப்பியம், சமய இலக்கியம், சாத்திரங்கள், நீதி நூல்கள், ஆகியவற்றில் பெண்ணடிமைத்தனம் நாகரிகமாகவும், நயமாகவும், படிப்படியாக புகுத்தப்பட்டுள்ளது.

பெண்களும் விட்டில் பூச்சி விளக்கில் விழுதல் போல் அடிமைத்தனத்தை சமயத்தின் பெயராலும், பண்பாட்டின் பெயரால் ஏற்றுக் கொள்கின்றனர்.

தமிழில் உள்ள பல பழமொழிகள் பெண்களை இழிவாகவும், ஆண்களை உயர்வாகவும் சித்தரித்துள்ளனர். இன்னும் சொல்லப்போனால் பெண்ணடிமைத்தனத்தை பரப்பி வருகின்றன.

காலந்தோறும் நிலவி வந்த பெண்ணடிமைத்தனத்தை அறிந்து கொண்டு அறிஞர் அண்ணா உணர்த்திய பெண் விடுதலை கோட்பாட்டை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆதலால் இந்த பெண்ணடிமைத்தனத்தை தற்போது பேச வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. சங்ககாலம் தொட்டு தற்காலம் வரை அதாவது பல்லவர் காலம், சோழர் காலம், மொகலாயர்கள் காலத்தில் மகளிர் நிலை, குறிப்பாக நாயக்கர் காலத்தில் உயர் குடிமக்களிடம் பல பெண்களை மணக்கும் பழக்கம் இருந்தது. திருமலை நாயக்க மன்னனுக்கு இருநூறு மனைவியர் இருந்தனர் என்பர் இவர்களிடம் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்தது. திருமலை நாயக்க மன்னர் இறந்தபோது அவனுடைய இருநூறு மனைவியரும் உடன்கட்டை ஏறியதாக கூறுவர். ஆனால் அது பொதுமக்களிடம் வழக்கத்தில் இல்லை. பெண்களை கோவிலுக்குப் பொட்டுக் கட்டிவிடும் பழக்கமும், விழாக்களின் போது அவர்கள் வீதியில் நடனமாடி செல்லும் வழக்கமிருந்தது.

**ஐரோப்பியர் வருகையால் விளைந்த மாற்றம்**

ஐரோப்பிய வருகையில் நாட்டில் எண்ணற்ற மாறுதல்கள். இந்த நாட்டில் பெண்கள் இடையே ஏற்பட்ட மாற்றங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு பெண்களின் முன்னேற்றத்திற்கும் தடையாக அமைந்தன. பெண்கள் கல்வி பெற்றமைக்கு ஐரோப்பியர் வருகையை காரணம் எனலாம். நாட்டில் மகளிர் ஒதுக்கப்பட வேண்டியவர்கள் அல்ல அவர்களுக்கு சம உரிமை கொடுத்தல் வேண்டும் என்பன போன்ற கொள்கைகள் வலுப்பெற்றன. பெண்களுக்கென தனி கல்லூரிகள், பள்ளிகள் அமைக்கப்பட்டன. தொழில் துறையிலும் பெண்கள் ஈடுபட்டிருந்தனர். எனவே, நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகள் ஐரோப்பியர் வருகையால் இந்தியாவிலும் பின்னர் தமிழகத்திலும் தாக்கத்தை உண்டாக்கியது. அதன் விளைவாக பாரதி, பாரதிதாசன், பெரியார், அண்ணா போன்றோர் தமிழக மக்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் சென்றனர்.

**முடிவுரை**

புராதன சமுதாயம் குடும்ப முறையில் அமைக்கப்படவில்லை அன்று பெண் சுதந்திரமாக வாழ்ந்தால் பிற்காலத்தில் அடிமைப்பட்டு இடையில் அடிமைப்பெண் என்று சுதந்திரமாக போராடிக் கொண்டிருக்கிறாள். அவளது வரலாறு அடிமை தலையுடன் முடியப் போவதுமில்லை. இன்றைய குடும்ப அமைப்பை ஆணாதிக்கம் ஏற்படுத்தியது. எதிர்கால சமூக அமைப்பை பெண்ணினமே தீர்மானிக்கும். மனித இனம் மறு உற்பத்தியிலும் ஈடுபடக் கூடிய வாய்ப்பு பெண்ணினத்திடம் மட்டுமே உள்ளது என்பதை ஆண் இனம் என்றும் மறந்துவிடக்கூடாது. பெண்ணின் விடுதலை உடனேயே ஆணும் விடுதலை பெறுவான். உலகத்தோடு படைக்கப்பட்ட அடிமைத்தளையை அப்பொழுது அறுந்துவிடும்.

பெண்ணடிமை தீரும் வரை உலகத்தின் அடிமைத்தனம் தீரப் போவதில்லை இதுவே சர்வதேசிய குரலாகும். என்று சே. கணேசலிங்கம் கூறுவது போன்று ஒருநாள் பெண்ணடிமை தீரும். அவளும் நாட்டில் சமதர்ம நோக்குடன் உலவ முடியும் என்ற நிலை வரும் எனலாம். அப்போது இன்றைய சோசலிச நாடுகளை போல் அல்லாமல் புதுவித உண்மையான சோசலிசத்தை வலியுறுத்தும் மக்களைக் கொண்ட நாடு உருவாகும் என நம்புவோம்... நம்பி வாழ்வோம்....

❁

மகளிர் தின சிறப்புப் பதிவு

# அனைவருக்கும் அழகிய வாழ்வியல் வணக்கம்



**தி. பாலகிருஷ்ணன்**
முகவர் முதல் நிலை, கண்ணம்பாளையம்
மாநகர் வட்டம் / கோவை. பேச : 9976549696

**சி**த்தர்கள் கூற்றுப்படி (வாதம், காற்று) (பித்தம், தீ) கபம், நீர் இம்மூன்றும் அனைத்து உயிரினங்களுக்கும், உணவாலும், செயலாலும், அதன் சரியான விகிதமுறை முறையே (1, காற்று) ($^1/_2$ பித்தம்) ($^1/_4$ நீர்) என்ற அளவில் இல்லாமல் மிகுதியாக அல்லது குறைவாக இருந்தால், நோய் உண்டாகும். பஞ்சபூதங்களால் (ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண்) ஆன பிரபஞ்சத்தில், அனைத்தும் காற்று, தீ, நீர் ஆகிய மூன்றாக செயல்படுகிறது. இதன் சமச்சீரற்ற தன்மையே நோய், துன்பம், இயற்கை பேரிடர் ஆகும்.

மிகுனும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று. (குறள்)

**''சிறப்பு வாய்ந்த குமரி எனும் காற்றாழை''**

மகரி தேரையரின் பாடலில் செப்பிய ''பொல்லா மேகம்
கபம் புல்சூலை குட்டம் ரசம் அல்லார் மந்தம் பகம் தரும்
குன்மம் எல்லாம் விட்டு ஏகும் அரிக்கும் எரிச்சர் கிரிச்சரமும்
மாறும் இவை குமரிக்கு மருண்டு.

**பாடலின் பொருள்:-**

''பொல்லா மேகம்:'' இது சர்க்கரை நோயை குறிக்கின்றது. இதனை மேகத்திற்கு ஒப்பிடுகின்றனர். மேகமானது தோன்றி மறைவதுடன் திரும்ப திரும்ப தோன்றுவதும், உயர்வதும், தாழ்வதும் அதன் இயற்கையான (சக்கரை) குணமாகும்.

''ரசம்'' எலும்பு மஞ்சையை ரசம் என்றழைப்பதுண்டு. எலும்பு மஞ்சையில் சத்துகள் குன்றிப் போனால் சிவப்பணுக்களின் உற்பத்தி தடைப்படும். இதன் விளைவால், இரத்தத்தை நரம்பு வழியாக இழுத்து செல்லும் பிராண வாயுவின் அளவு குறைந்து நம் செயலாற்றல் குறைந்து இளமையில் முதுமையில் உண்டாகும் மூட்டுவலி மூட்டுக்களில் வலுவின்மை போன்ற நோய்களுக்கு குமரியை தோலுடன் கொஞ்சம் எடுத்து இஞ்சி, மஞ்சள் சமன் எடை எடுத்து விழுது போலரைத்து மிதமாக சூடாக்கி பற்றுப் போட்டு நன்றாக காயவிட மூட்டுவலி, வீக்கம் என்பதை நீங்கி சுகம் பெறலாம்.

''மந்தம்'' என்பது ஜீரணக் குறைபாடு, அஜீரணம் வயிற்று பொறுமலாக இருக்கும். இதன் மூலம் உடலில் அமிலம் சுரந்து அசாதாரண நிலையை ஏற்படுத்தும். இந்நிலையை குமரி பாதுகாக்கும்.

''புல்சூலை'', குடலில் புழுக்கள் ஒட்டுண்ணியாக இருந்து சத்து பொருள் உறிஞ்சி குடித்து தேக ஆரோக்யத்தில் பல்வேறு நோய்களை ஏற்படுத்தும் இப்படிப்பட்ட புழுக்களை அகற்றும் ஆற்றல் குமரிக்கு உண்டு.

**''வியப்பூட்டும் கற்றாழை ரகசியம்''**

ஆரோக்யம், அழகு என இரண்டு பகுதிகளிலும் சொல்லி அடிக்கும் கற்றாழை.

1) சாதாரண உடல் சூட்டிலிருந்து, புற்றுநோய் வரை அத்தனைக்கும் திறன் கொண்டது கற்றாழை. நீண்ட நாட்களாக உறுதுணையாக வாழும் வகையில் 'காயகல்ப' மருந்தாக பயன்படுத்தி உள்ளனர். சித்தர்கள்.

**''கற்றாழையின் மருத்துவ சிறப்புகள் சித்த மருத்துவத்தில்''**

கற்றாழையின் உட்பகுதியில் உள்ள ஜெல் போன்ற சோற்றை எடுத்து 7 முறை நீரில் நன்றாக கழுவ வேண்டும். சிறுசிறு துண்டுகளாக வெட்டி அதன் மீது பனங்கற்கண்டு, தூவி கொள்ள வேண்டும். இதை மூன்றிலிருந்து 5 ஸ்பூன் வரை பகல் நேரத்தில் மட்டும் 1 மாத காலம் சாப்பிட்டு வந்தால் உடல் உறுதியாகும்.

**உடல் குளிர்ச்சிக்கு கற்றாழை:**

வெப்பம் மிகுதியால் ஏற்படக் கூடிய (பித்தம்) பிரச்னைகளுக்கு சிறந்த நிவாரணி கற்றாழை.

உடல் சூட்டை குறைப்பதோடு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் உதவுகிறது.

உடல் ஆரோக்யமாக செயல்படுவதற்கு தேவையான 22 அமினோ அமிலங்கள் காற்றழையில் உள்ளது.

வைட்டமின்கள் A, B1, B2, B3, B5, B6, B12 C, E மற்றும் துத்தநாகம், செலினியம், கால்சியம், மாங்கனீசு, மெக்னீசியம், குரோமியம், தாமிரம், இரும்பு, பொட்டாசியம் போன்ற தாதுக்களும் உள்ளன.

பெருங்குடலை சுத்தம் செய்து மலத்தை வெளியேற்றும். Aloin, Emodin போன்ற Anthraquinones என்கிற வேதிப்பொருளும் ஜீரண சக்தியை அதிகரிக்கும். Amylases, Bradykinases Catalases போன்ற நொதிகளும் சருமத்தைப் பாதுகாக்க தேவையான Lignins போன்றவையும் உள்ளன. Salicylic Acid & Saponins, Sterois ஆகியவை புண்களை ஆற்றுவதில் பெரும் பங்கு வகிக்கிறது.

ஆரம்ப நிலை புற்றுநோய்களுக்கு நல்ல தீர்வளிப்பதாக விஞ்ஞானிகள் பெண்களின் சரும பராமரிப்பில் தனிச்சிறப்பு பெற்றது. சருமம் பளபளப்பாக இருப்பதோடு சரும குறைகளை சரி செய்கிறது. சோற்றை எடுத்து அதில் சிறிது ''மஞ்சள்பொடி''. குழைத்து உடல் முழுவதும்

தேய்த்து $^{1}/_{2}$ மணி நேரம் கழித்து வெதுவெதுப்பான சுடுநீரில் வாரம் இருமுறை பெண்கள் குளித்து பெண்களின் சருமம் ''மிளிரும்.''

பேரழகி, ''கிளியோபட்ரா'' கற்றாழையை பயன்படுத்தி தன் மேனி அழகை பாதுகாத்து கொண்டதாக வரலாற்று குறிப்புகள் உண்டு.

மலச்சிக்கலுக்கு முழுமையான நிவாரணம்: சோற்றை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி ஆமணக்கு எண்ணெயில் கலந்து அத்துடன் சிறிது சின்ன வெங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம் போன்றவற்றை சேர்த்து லேகிய பதத்தில் காய்ச்சி தயார் செய்து, மலச்சிக்கல் அவதிப்படும்போது 1 ஸ்பூன் அளவில் சாப்பிட்டு வந்தால், மலச்சிக்கல் முழுமையாக குணமாகும்.

கற்றாழை பால் போல் அரைத்து தேங்காய் எண்ணெயில் கலந்து காய்ச்சி ஆறிய பிறகு பாட்டிலில் வைத்து தலைக்கு தேய்த்து வந்தால், தலைமுடி உதிர்வது குறைந்து, முடி கருமையாக இருக்கவும், நன்கு வளர்வதற்கும் உதவுகிறது.

சோற்றை எடுத்து புண்களின் தடவி வர, புண்கள் கொப்பளங்கள் குணமாகிறது. அல்சர், வயிற்றுப்புண், மூலம் போன்றவற்றிற்கு சிறந்த நிவாரணம்.

நாக்கு, வாய்ப்புண்ணில் அவதிப்படுவோர் கற்றாழையுடன் $^{1}/_{4}$ ஸ்பூன் வெந்தயப்பொடி கலந்து சாப்பிட புண்கள் ஆறும்.

**யார் சாப்பிடக் கூடாது**



கற்றாழை குளிர்ச்சியானது என்பதால் ஆஸ்த்மா, சளி, இருமல் போன்ற பிரச்னைகள் இருப்போர் தவிர்ப்பது நலம். ''இருப்பினும்'' சிறிது சிறிது சேர்த்து வர சளியை உண்டாக்கி காலப்போக்கில் நோய் எதிர்ப்பு சக்தி பெற்று விடும். அதன் பின்னர் கபம் தனது சக்தியை இழந்துவிடும் வயதானவர்களுக்கு மார்பு பகுதியில் கபம் கட்டுவது இயல்பு. இதனால் உடல் திடகாத்திரத்தை இழந்து விடும் அச்சந்தர்ப்பத்தில் குமரியை உணவாக்கி திடகாத்திரத்தை பெற முடியும். குமரி காயகற்ப மூலிகையாகும்

ஏற்கனவே கபம் அதிகமாக இளை நோய்க்கு ஆளயானவர்கள் வைத்திய ஆலோசனையின்பேரில் உபயோகிக்க தொடங்குவது நல்லது. அலோபதி மருந்துகளுடன் பயன்படுத்தி அலோபதி மருந்துகளை நிறுத்தி கொள்ள முடியும் பொதுவாக எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளல் நன்று.

குமரி குளுமையானது. இதை பாவிக்க ஆரம்பிக்கும் போது இது முதலில் கபத்தை உருவாக்கி பின்னர் எதிர்ப்புச் சக்தியை உடலில் ஏற்படுத்தி கபத்திலிருந்து காத்து உறுதிப்படுத்தும்.

## வாரியத்திற்கு நமது கடிதங்கள்

நாள் : 02.03.2022

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் - 2022 பிப்ரவரி 26 மற்றும் 27ல் நடைபெற்ற மாநில செயற்குழு முடிவின்படி கோரிக்கைகளை நிறைவேற்ற ஆர்ப்பாட்டம் - தெரிவித்தல் - தொடர்பாக.**

வணக்கம். 2022 பிப்ரவரி 26 மற்றும் 27 தேதிகளில் திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழு தீர்மானம் 7ன்படி நீண்ட நாட்களாக தீர்வு காணப்படாமல் உள்ள கோரிக்கைகளை நிறைவேற்ற எதிர்வரும் 14.03.2022 அன்று மாலை 05:20 மணிக்கு தமிழகம் முழுவதும் மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பாக கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## 2022 மார்ச் 14ல் நடைபெற உள்ள ஆர்ப்பாட்டத்திற்கான கோரிக்கைகள்

1. **1.12.2019 முதல் வழங்கிட வேண்டிய ஊதிய உயர்வுக்கான பேச்சுவார்த்தையை தொடங்கிடுக.**
2. **தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) பதவிக்கு வாரிய செயலாளருக்கு கூடுதல் பொறுப்பு வழங்கியதை ரத்து செய்து பொறியாளரை நியமித்திடுக.**
3. **ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்திட பேச்சுவார்த்தை நடத்திடுக.**
4. **பகுதி நேர சுகாதாரப் பணியாளர்கள் இல்லாத பிரிவு அலுவலகங்களுக்கு பணியமர்த்திடுக.**
5. **09.02.2022ல் வலியுறுத்திய கேங்க்மேன் கோரிக்கைகளுக்கு உத்தரவு வெளியிடுக.**
6. **அடிப்படை பதவிகள் Field Assistant, Technical Assistant, Assistant Draughtsmen, Assistant Engineer, Junior Assistant, Typist, Assessor காலியிடங்களை மின்சார வாரியமே தேர்வு செய்து நிரப்பிடுக.**
7. **Junior Assistant (Adm), Technical Assistant, Assistant Engineer உள்முகத் தேர்வு உடனே நடத்திடுக.**
8. **துறைத் தேர்வு எழுதி (Department Test) தேர்ச்சி பெற்றவர்களுக்கு நிறுத்திய ஆண்டுயர்வை மீண்டும் வழங்கிடுக.**
9. **மேட்டூர் பணிமனையின் உற்பத்தித் திறனை பெருக்க நடவடிக்கை எடுத்திடுக.**
10. **ஆட்குறைப்புக்கு அடித்தளமிடும் பணிகளை கணக்கீட்டுப் பிரிவில் புகுத்துவதைத் தவிர்த்திடுக.**

பொதுச்செயலாளர்

பெறுநர்: நாள் : 14.02.2022

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : கேங்க்மேன் - தொழிலாளர்களுக்கான கோரிக்கைகள் - உத்தரவிட வேண்டுவது - தொடர்பாக.**

கேங்க்மேன் தொழிலாளர்களுக்கான கோரிக்கைகள் குறித்து தொடர்ந்து வாரியத்திற்கு கடிதம் எழுதியும், பேச்சுவார்த்தையில் குறிப்பிட்டு பேசியும் வருகிறோம்.

கடந்த 02.02.2022ல் வாரியத் தலைவருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இதுகுறித்து விவாதிக்கப்பட்டதை தங்களின் மேலான கவனத்திற்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

இந்நிலையில் கடந்த 09.02.2022ல் தமிழகம் முழுவதும் மின்சார வாரிய அலுவலகங்கள் முன்பு கோரிக்கைகள் அடங்கிய சுவரொட்டி ஒட்டியும், கோரிக்கை அட்டை அணிந்தும் பணிக்கு சென்று கேங்க்மேன் தொழிலாளர்களுக்குண்டான சலுகைகளை உடன் உத்திரவிடக் கோரி வலியுறுத்தியுள்ளோம்.

எனவே, தலைவர் அவர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு கேங்க்மேன் தொழிலாளர் களுக்கான சலுகைகளை உத்திரவிட்டு அளித்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**A. சேக்கிழார்,** பொதுச்செயலாளர்

## TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன்

**பதிவு எண்: 3600/-சென்னை**

39/101, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2 கைபேசி: 9841446621

## கேங்க்மேன் தொழிலாளர்களுக்கான கோரிக்கை நாள்: 09.02.2022

- ☆ மாவட்டம் விட்டு வேறு மாவட்டங்களில் பணி நியமனம் செய்தவர்களை சொந்த மாவட்டத்தில் பணியமர்த்திடுக!
- ☆ பயிற்சிக்காலம் இரண்டு ஆண்டுகள் என்பதை மூன்று மாதமாக குறைத்து கள உதவியாளராக நியமித்திடுக.
- ☆ தேர்வு செய்து நிறுத்தி வைத்துள்ள 5000 கேங்க்மேன்களுக்கு பணி நியமனம் வழங்கிடுக.
- ☆ 8 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்ய உத்தரவிடுவதை நிறுத்திடுக.
- ☆ வாராந்திர விடுமுறை அனுமதித்திடுக.
- ☆ மின்சாரம் செல்லுமிடத்தில் வேலை செய்ய உத்தரவிடுவதை நிறுத்திடுக.
- ☆ விடுப்பு, இரட்டிப்பு ஊதியம், பயணப் பட்டியல் அனுமதித்திடுக.
- ☆ கல்வித் தகுதிக்கேற்ப உள்முகத்தேர்வு செய்ய உத்தரவிடுக.
- ☆ பகுதி நேரப் படிப்பு படித்தால் பதவி உயர்வுக்கு அனுமதித்திடுக.

**தோழர்களே!**

**2022 பிப்ரவரி 9ம் நாள் கேங்க்மேன் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி தமிழக அரசையும், மின்சார வாரியத்தையும் வலியுறுத்துவோம்!**

**ஒன்றுபடுவோம்! போராடுவோம்!! வெற்றி பெறுவோம்!!!**

பெறுநர்: நாள் : 17.02.2022

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

***பொருள் : தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) விருப்ப ஓய்வு - கூடுதல் பொறுப்பு - உத்தரவு - தொடர்பாக.***

***பார்வை : Memorandum No.6076 /A1 /A12 / 2022 - 1 Dt. 16.02.22.***

பார்வையில் கண்டுள்ளபடி தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) விருப்ப ஓய்வில் சென்றுவிட்டதால் கூடுதல் பொறுப்பு நியமனம் குறித்து உத்தரவு வெளியாகி உள்ளது. இதுகுறித்து தங்களது மேலான பார்வைக்கு தெரிவிப்பது யாதெனில்.

1. தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) பதவியில் உள்ளவர் ஓய்வு பெற்றாலோ அல்லது மாறுதலில் சென்றாலோ வேறு தலைமைப் பொறியாளர் நியமிப்பது வழக்கத்தில் உள்ளது.
2. தலைமைப் பொறியாளர் விடுப்பில் சென்றால் துணைத் தலைமை பொறியாளருக்கு பொறுப்பு வழங்குவதும் வழக்கத்தில் உள்ளது.

தலைமைப் பொறியாளர் பணியமைப்பு விருப்ப ஓய்வில் சென்றுள்ள நிலையில் வழக்கத்திற்கு மாறாக வாரிய செயலாளருக்கு கூடுதல் பொறுப்பு வழங்கி உத்திரவிட்டுள்ளது கண்டு ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைகிறோம்.

நிர்வாகக்கிளைக்கு பொறியாளர் அல்லாத ஒருவரை தலைமைப் பொறுப்பில் நியமிப்பது என்பது சற்றும் பொருந்தாத ஒன்றாகும்.

செயலகப் பிரிவிற்கு அயல்பணிக்கு வந்துள்ள செயலாளரை தலைமைப் பொறியாளர் பணியமைப்பு கூடுதல் பொறுப்பு வழங்கியுள்ளது இதுவரை உள்ள நடைமுறைக்கு எதிரானதாக கருதுகிறோம்

பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய தலைமை பொறியாளர்களில் ஒருவரை தலைமை பொறியாளர் பணியமைப்பாக நியமித்திருக்கலாம் அல்லது கூடுதல் பொறுப்பு வழங்கியிருக்கலாம் அல்லது துணைத் தலைமைப் பொறியாளருக்கு பொறுப்பு வழங்கியிருக்கலாம் இதை விடுத்து செயலாளருக்கு இக்கூடுதல் பொறுப்பு வழங்கியிருப்பது பொறியாளர்கள் தொழிலாளர்கள் மத்தியில் வாரியத்தின் மீதான நல்லெண்ணம் குறைய வழிவகுக்கும்.

பொறியாளர்களுக்கென உள்ள இப்பதவியை பொறியாளர் அல்லாத ஒருவருக்கு வழங்குவது சரியான முன்னுதாரணமாக அமையாது.

இதுவரை இல்லாத ஒரு நடைமுறையை புகுத்த வேண்டாம் என கேட்டுக் கொள்வதோடு தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) பதவிக்கு பொறியாளர் ஒருவரை நியமித்து உத்திரவிட வேண்டுகிறோம்.

பார்வையில் கண்டுள்ள உத்தரவிற்கு மாற்று ஏற்பாடாக ஏற்கனவே நடைமுறையில் உள்ளபடி தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) பதவிக்கு பொறியாளரை நியமித்து மறுஉத்தரவிட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

# தலைமை பொறியாளர் பதவியை கூடுதல் பொறுப்பாக வாரிய செயலாளருக்கு அளித்த உத்தரவு

Secretariat Branch
N/PK.R.R. Maaligai,
144, Anna Salai,
Chennai-2

**Memorandum No. 6076/A1/A12/2022-1, dated : 16.02.2022**

Sub : ESTABLISHMENT - Class I Service - Chief Engineer, Personnel, Administrative Branch, Chennai - Additional charge arrangement - Orders - Issued.

Ref : (Per.) CMD TANGEDCO Proceedings No. 35 (SB), dated 16.02.2022

****

Consequent to the Voluntary Retirement of Thiru R. Krishnamoorthy, Chief Engineer, Personnel, Adminstrative Branch, Chennai from 16.02.2022 A.N. issued in the reference cited, Thiru A. Manikkannan, Secretary, TANGEDCO, Chennai is hereby directed to hold full additional charge of the post of Chief Engineer, Personnel, Administrative Branch, Chennai, with immediate effect, until further orders.

**Rajesh Lakhoni,**
Chairman Cum Managing Director

## PRESS & REGISTRATION OF BOOKS ACT

**Registration of Newspapers (Central) Rules, 1967**

**Form - IV (See Rule - 8) Statement about**

**OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER**

**TNEB EMPLOYEES' FEDERATION NEWS**

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | 39/101, Singanna Street, Chintadripet, Chennai - 600 002. |
| 2. | Periodicitry of Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | Mr. D. Babu |
| | Whether Citizen of India | : | Yes - Indian |
| | Address | : | 177/72, Singanna Street, Chintadripet, Chennai - 600 002. |
| 4. | Publisher's Name | : | A. SEKKIZHAR |
| | Whether Citizen of India | : | Yes - Indian |
| | Address | : | 39/101, Singanna Street, Chintadripet, Chennai - 600 002. |
| 5. | Editor's Name | : | A. SEKKIZHAR |
| | Whether Citizen of India | : | Yes - Indian |
| | Address | : | 39/101, Singanna Street, Chintadripet, Chennai - 600 002. |
| 6. | Name and address of Individual Who own news paper and partners or share holders holding more than one percent of Total Capital | : | A. SEKKIZHAR 39/101, Singanna Street, Chintadripet, Chennai - 600 002. |

I, A. Sekkizhar, hereby declare that the particulars given above are true to the best - of my knowledge and belief.

Place : Chennai - 600 002
Date : 17.3.2022

(sd) **A. SEKKIZHAR**
Signature of Publisher



# மன அழுத்தம் இன்றி வாழ மிகச் சிறந்த சில வழிமுறைகள்

**ப. நாகராஜன்,** M.E.,
மாநில இணை செயலாளர், கோவை
✆ : 9965656568

- ஒரு காகிதத்தில் அன்றைய தினம் செய்ய வேண்டிய பணிகளையும் எப்போது செய்யப் போகிறோம். எந்த பணிக்கு அடுத்து எந்த பணி என்பதையும் வரிசைப்படுத்தி குறித்து வையுங்கள்.
- வேலைகளை தள்ளி வைப்பது மன அழுத்தத்தை அதிகரிக்கும். செய்ய வேண்டியதை தாமதப்படுத்தாமல் செய்ய பழகுங்கள்.
- முன் கூட்டியே திட்டமிடுங்கள். எதையும் கடைசி நேரம் வரை காத்திருந்த பின் செய்வதை தவிருங்கள்.
- காத்திருப்பது சிரமம் என்று கருதாதீர்கள். ஒரு புத்தகத்தை கையில் வைத்திருப்பது காத்திருத்தலை சுகமாக்கும்.
- சற்று முன் கூட்டியே செல்ல பழக்கப்படுங்கள். பத்து நிமிடத்தில் செல்ல முடிந்த இடத்திற்கு இருபது நிமிடத்திற்கு முன்பாகவே புறப்படுங்கள்.
- சில மாற்று யோசனைகளை கைவசம் வைத்திருங்கள். உதாரணமாக: பஸ் தாமதமானால், இதை - இதை செய்வேன் என்பது போன்றவை.
- செல்லும் இடங்கள் புதிய இடங்களாக இருந்தால் வழியை முதலிலேயே தெளிவாக கேட்டு வைத்துக் கொள்ளுங்கள்.
- எளிமையாக வாழுங்கள். உற்சாகமான நண்பர்களுடன் பழகுங்கள் அதிக நேரம் எழுத பழகுங்கள். கவலைகளை, எரிச்சல்களை தோல்விகளை குறைக்க எழுத்து வடிகாலாகும்.
- குழப்பம் கவலைகளை உள்ளுக்குள் புதைக்காமல் நம்பிக்கைக்குரிய நண்பரிடம் பகிருங்கள்.
- தினமும் உங்கள் மனதை மகிழச் செய்யும் செயல்கள் எதையேனும் ஒன்றை செய்யுங்கள். அதில் பொருளாதாரம் பயன் ஏதும் இல்லாவிட்டாலும் கூட பிறருக்காக எதையேனும் செய்ய பழகுங்கள்.
- என்னை யாரும் புரிந்து கொள்ளவில்லையே எனும் முனங்கல்களைத் தவிர்த்து பிறரை புரிந்து கொள்ள முயலுங்கள்.
- உங்கள் உடை, நடை, பாவனைகளில் தன்னம்பிக்கை மீண்டும் உடைகளை நன்றாக அணிவதே தன்னம்பிக்கையை அதிகரிக்கும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை.

வெற்றி நமதே!

# எது சிகரம்?

**R. ரீபா ஜார்ஜ்**
தே.நி. செவிலியர்
தலைமை மருந்தகம்
சென்னை-2



பெண்ணால் எட்டிப்பிடிக்க முடியாத
பெரிய மலையின் உச்சியோ சிகரம்?
மலையினும் பெரிய மனதை உடையவள் பெண்!
தன் கனவுகளை சிதறடித்து
தனது கஷ்டங்கள் நஷ்டமானாலும்
தயங்காது இயங்கும் இயந்திரம் அவள்!
தன்னம்பிக்கையை விடாது
தன்னிறைவோடு தன் பணியை
தானே செய்து திருப்தி அடையும் இறைவி அவள்!
பொங்கி எழும் அருவியின் இரைச்சலுக்கும்
சுதந்திரம் உண்டு - ஆனால்
பெண்ணுக்கு சுதந்திரம் என்றோ என்ற
கேள்விக்குரிய நிரந்தரம் அன்றோ!
கொட்டித் தீர்க்க முடியாத கேள்விக் குறியல்லவோ அவள்!
ரசிக்க மட்டுமே தெரிந்த பெண்மைதான் அவள் மேன்மையோ!
விடியலைத் தேடும் விட்டில்பூச்சியாய் வாழும் பெண்மை.
அவளது விழியோரக் கவிதை! அர்த்தம் தெரியாத மொழி!
அவளது வாழ்க்கை ஒரு சுமைதாங்கி,
தனக்கென்று மட்டும் சமைக்கத் தெரியாத புதிர் அவள்!
பிள்ளைகளின் பிடிவாதத்திற்கு விட்டுக் கொடுக்கும்
தன் மற்றொரு குழந்தை அவள்
அழுவதும் சிரிப்பதும் அவளது இரவு பகல்
விழி இமைகளுக்கும் ஓய்வு இருக்கும் - ஆனால் அந்த
விழிக்குள் இயங்கும் பெண்மை நாளைய தினத்தைப் பற்றி
குறிப்பெடுக்கும் நாள் ஏடு அவள்!!
எது சிகரம் பெண்ணுக்கு
கடந்து வந்த பாதைகள் கரடு முரடு தான் எனினும்
கனப்பொழுதும் கண்ணிமைக்காமல்
காலத்தை காட்டும் கடிகார முள் அவள்!
விதி என்னும் வீணையில்
விளையாடி மகிழும் விண்மீன் விண்மீன் அவள்!
எரிமலைதான் எனது வாழ்க்கை எனத் தெரிந்தும் அதனுள்
எட்டிப்பார்க்கத் தயங்காத எதார்த்தவாதி அவள்
இப்பெண்மைக்கு எதுவுமே
சிகரம் இல்லை
சிட்டாக வட்டமடித்து சில்லென்ற தென்றலால்
வானவில் போன்ற பெண்ணுக்கு இவ்வுலகில்
எதுவுமே சிகரம் இல்லை.




**இந்து ராஜேஷ்குமார்**
நிர்வாக உதவியாளர்
தலைமைப் பொறியாளர் அலுவலகம்
கோவை மண்டலம்


# மனம் ஒரு மாய சாவி!

**ம**னம் ஒரு மாயசாவி,

முடியும் என்று நினைத்துவிட்டால் பெரிய பூட்டுகளையும் திறந்து விடும்.

முடியாது என்று முடிவு செய்துவிட்டால் தான், சாவி என்பதையே மறந்துவிடும்.

மனதால் எவ்வளவு பலமானவர்களையும் அழவைக்கும் ஒரே ஆயுதம் உண்மையான அன்பு மட்டுமே!

அன்பினால் ஆளவேண்டிய மனங்களை அதிகாரத்தினால் அடக்காதீர்கள்.

ஆள்வதில் இல்லை உங்கள் அன்பு இதயத்தில் வாழ்வதில் உள்ளது உண்மையான அன்பு.

துன்பம் இல்லாத இன்பமும், முயற்சி இல்லாத வெற்றியும் அதிக நாள் நிலைப்பதில்லை.

சிறிய விதை மரமாகும்போது, சிறிய துளிகள் பெருவெள்ளமாகும்போது, நம் முயற்சிகள் எப்படி பெரிய வெற்றிகளை தராமல் போய்விடும்!

முயற்சி செய்யுங்கள், வெற்றி பெறுங்கள்.

சாதிக்க துடிக்கும் ஒவ்வொருவருக்கும் தன்னம்பிக்கையும் அதிகம், அவமானமும் அதிகம்.

இதை ஏற்றுக் கொள்பவர்கள் மட்டும்தான் காலத்தாலும் வீழ்த்த முடியாத வரலாறு படைக்கிறார்கள்.

கம்பீரம் என்பது உங்கள் உடலில் அல்ல, செயலில்.

கண்ணியம் என்பது உங்கள் பேச்சில் அல்ல, நடத்தையில்.

கருணை என்பது உங்கள் உதவியில் அல்ல, அன்பில்.

முயற்சி திருவினையாக்கும்
முயன்றால் சாதிக்க முடியும்!

# பெடரேஷனின் திட்ட மற்றும் கோட்ட நிர்வாகிகள் பட்டியல்

## ஈரோடு மின்பகிர்மான வட்டக் கிளை

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | **என். அம்மாச்சி** | சிறப்பு நிலை முகவர் | தெற்கு/ஈரோடு |
| செயலாளர் | **ஆர்.பி.எ. நந்தகுமார்** | வணிக ஆய்வாளர் | பொருள் மேலாண்மை |
| பொருளாளர் | **மு. சிவக்குமார்** | சிறப்பு நிலை முகவர் | நகர்/பெருந்துறை |
| செயல் தலைவர் | **வி. சிவக்குமார்** | முகவர் முதல்நிலை | கஸ்பாபேட்டை |
| அமைப்பு செயலாளர் | **எம். பாஸ்கரன்** | இளமின் பொறியாளர் (ஓய்வு) | ஈரோடு |
| உபதலைவர் | **என். கோவிந்தராஜன்** | சிறப்பு நிலை முகவர் | ஈரோடு துமிநி |
| உபதலைவர் | **ஆர். சுரேஷ்** | சிறப்பு நிலை முகவர் | வெண்டிபாளையம் |
| உபதலைவர் | **ஈ. பெரியசாமி** | மின்பாதை ஆய்வாளர் | ஈரோடு மின்பாதை |
| இணைச் செயலாளர் | **ஆர். இளங்கோ** | முகவர் முதல் நிலை | கிராமியம் குன்னத்தூர் |
| இணைச் செயலாளர் | **பி. நாச்சிமுத்து** | மின்பாதை ஆய்வாளர் | சிறப்பு பராமரிப்பு |
| இணைச் செயலாளர் | **த. அய்ணன்** | கணக்கீட்டு ஆய்வாளர் | இ.கா.வலசு |
| இணைச் செயலாளர் | **எ. வெங்கடாசலம்** | கேங்க்மேன் | நகர்/ஈரோடு |

## நகரியம்/ஈரோடு கோட்டம்

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | **எம். இளையராஜா** | வணிக உதவியாளர் | முத்தம்பாளையம் |
| செயலாளர் | **எஸ். ஜெயக்குமார்** | மின்பாதை ஆய்வாளர் | இ.கா.வலசு |
| இணைச் செயலாளர் | **பி. தாமோதர பிரசாத்** | கேங்க்மேன் | நகர்/வீ.சத்திரம் |
| இணைச் செயலாளர் | **எம். இளவரசன்** | கேங்க்மேன் | தெற்கு/ஈரோடு |

## தெற்கு/ஈரோடு கோட்டம்

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | **கே. நடராஜன்** | முகவர் முதல் நிலை | மொடக்குறிச்சி |
| செயலாளர் | **எ. சுப்ரமணி** | முகவர் முதல் நிலை | கணபதிபாளையம் |
| இணைச் செயலாளர் | **கே. வேலுசாமி** | கேங்க்மேன் | கே.பி.கிராமம் |

## பெருந்துறை கோட்டம்

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | **எ. பிச்சைமுத்து** | முகவர் முதல் நிலை | நகர் சென்னிமலை |
| செயலாளர் | **எம். கதிர்வேல்** | முகவர் முதல் நிலை | வடக்கு பெருந்துறை |
| இணைச் செயலாளர் | **ஜி. ரமேஷ்** | கேங்க்மேன் | விஜயமங்களம் |
| இணைச் செயலாளர் | **மு. சிவக்குமார்** | கேங்க்மேன் | கிராமியம்/சென்னிமலை |
| இணைச் செயலாளர் | **வி.ராஜேஷ்குமார்** | கேங்க்மேன் | கிராமியம்/சென்னிமலை |

## காடம்பாறை மின்திட்ட புதிய நிர்வாகிகள்

*President:*
**C. SARAVANAN**
Junior Engineer II Gr
Upper Aliyar 110 KV SS
Cell : 9444569639

*Working President:*
**A. HARIDASS**
Assistant (Accounts)
O/o EE/Civil/Minparai
Cell : 94868 12082

*Secretary*
**P.S. SAM MURUGESAN**
Adm. Supervisor
O/o SE/Kadamparai Generation Circle,
MINPARAI-642 101
Cell : 9245864225

*Treasurer:*
**S. MUTHUKUMAR,** *B.E.,*
Assistant Engineer,
Poonachi PH.,
Upper Aliyar

*Organising Secretary:*
**S. NILVAZHAGAN**
*Senior Syrang*
*Kadamparai PH*

*Vice President:*
**R. MYILVEL**
Mech. II. Gr
Sarkarpathi PH
Cell : 9444326530

*Joint Secretary:*
**A. MOHAMMED RAFI**
Spl. Gr. Foreman,
O/o AE/Mech Maintenance,
Kadamparai PH
Cell : 94426 69653

### KADAMPARAI PH DIVISION`:

*President:*
**S. KALMUTHU**
Wireman,
O/o AE/Elec/Camp Kadamparai PH
Cell : 94873 20585

*Secretary:*
**M. BABU**
Senior Driver
O/o EE/Controls/Kadamparai PH
Cell : 9489125140

*Vice President:*
**N. THANGARASU**
Time Keeper

*Joint Secretary:*
**K. VICTOR JAYAGAR**
Senior Driver
O/o AE/Kadamparai PH

### SARKARPATHI POWER HOUSE:

*President:*
**P. SIVAKUMAR,** Wireman
Cell : 8300244868

*Secretary:*
**K. MUTHUMANICKAM,** Senior Welder
Cell : 9444719324

*Assistant Secretaries:*
**N.P. VELAYUDHAM,** Tools Keeper

**P. MANIKANDAN**
Foreman I Gr.

*Section Representatives:*
**P. MANOHARAN**
Foreman I Gr.

**K. PADRAN,** Mech II Gr.

Selvi. **PALANIAMMAL**
Senior Crane Operator

# நம்முடன் இணைந்துள்ள தமிழ்நாடு அனைத்து மின் பணியாளர் முன்னேற்ற நலச்சங்கம் பொதுக்குழு தீர்மானங்கள்

1. தமிழ்நாட்டில் புதியதாக அரசு ஏற்று இருக்கும் திராவிட முன்னேற்ற கழகத்திற்கு இந்த பொதுக்குழு வாழ்த்துக்களை தெரிவிக்கிறது.
2. சங்கத்தில் உறுப்பினர் சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டும் உதாரணமாக சங்கத்தின் 1 லட்சம் உறுப்பினர் என்ற இலக்கை 2023 அடைய அனைவரும் ஒத்துழைக்க இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.
3. சங்கத்தின் நிதி ஆதரத்தை பெருக்க வேண்டும் அதற்கு சோலார் தொழில்நுட்ப பயிற்சியை தொடர்ந்து நட்திட வேண்டுமென இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.
4. H மற்றும் B மின் உரிமம் தேர்வு தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என இந்த பொதுக்குழு தமிழக அரசை கேட்டுக் கொள்கிறது.
5. மின் பணியாளர்களுக்கு தனி நல வாரியம் அமைக்கப்பட வேண்டும் என 2022ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்திட வேண்டும் எனவும் பின்பு அதற்கான அறப்போராட்டம் நடத்தப்பட வேண்டும் என இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.
6. தமிழகத்தில் அரசு பணிகளில் மின் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் என்றும், நிரந்தர வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளித்திட வேண்டுமென இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.
7. ஒரே நாடு ஒரே லைசன்ஸ் என்ற கோரிக்கையை மத்திய அரசாங்கத்தில் வலியுறுத்தப்பட வேண்டும் என இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.
8. மத்திய அரசாங்கத்தின் ஜிஎஸ்டில் எலக்ட்ரிசியன் மற்றும் பிளம்பர் போன்றவர்களை சேர்த்திருப்பதை நீக்கிட வேண்டுமென இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.
9. தமிழகத்தில் மின் உரிமம் வழங்கும் வாரியத்தின் கிளை திருச்சியில் அமைக்கப்பட வேண்டுமென தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது.
10. சங்கத்தின் 2021 E படிவம் சமர்ப்பிக்க மாநில நிர்வாகிகள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என இந்த பொதுக்குழு வலியுறுத்துகிறது மற்றும் 2022ல் பதிவு செய்யப்பட்ட அனைத்து மாவட்ட தொழிலாளர் நலத்துறையில் E படிவத்தை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கிறது.
11. சங்கத்தின் சார்பாக பதிவு செய்யாத மாவட்டங்களில் கூடிய விரைவில் நாம் தொழிலாளர் நலத்துறையில் பதிவு செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறது.
12. தமிழகம் முழுவதும் உள்ள மின் பணியாளர்களுக்கு பாதுகாப்பு முறையை வலியுறுத்த வேண்டும் மற்றும் அரசாங்கம் தரக்கூடிய வாரிய அட்டையை பெறுவதற்கு சங்கம் வலியுறுத்த வேண்டுமென தீர்மானிக்கிறது.
13. தமிழகத்தில் உள்ள அனைத்து மின்துறை சார்ந்த சங்கங்களுடன் நட்புறவோடு சேர்ந்து செயல்பட வேண்டும் என இந்தப் பொதுக்குழு தீர்மானம் செய்கிறது.

சங்கத்தின் சார்பாக வரும் 2022இல் மே மாதம் தொழிலாளர் தினத்தில் திருச்சியில் மாநாடு நடத்தப்பட வேண்டும் என இந்தப் பொதுக்குழு தீர்மானிக்கின்றது.

**- M. நாகலிங்கம்,** பொதுச்செயலாளர்



# அத்தியாயம் - 6

# அரசுக்கு எதிரான குற்றங்கள் பற்றி

வழக்கறிஞர் **தேவிபாலா குணசேகரன்,**
**M.A., B.L.,**

**பிரிவு - 121 (Section - 121)**

நபர்/ நபர்கள் எவரேனும் இந்திய அரசுக்கு எதிராகப் போர்தொடுத்தல், அல்லது போர்தொடுக்க முயற்சி செய்தல் அல்லது போர்தொடுக்கத் தூண்டுதல் அல்லது அதற்கு உடந்தையாக இருத்தல் போன்ற செயல்களைச் செய்தால் அவர்களுக்கு மரண தண்டனையோ, ஆயுள் தண்டனையோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அபராதத்திற்கு உள்ளாதலும் வேண்டும்.

**பிரிவு - 121 அ (Section - 121A)**

இந்தியாவிற்குள்ளோ அல்லது வெளியிலோ 121ஆவது பிரிவின் கீழ் தண்டிக்கப்படத்தக்க குற்றங்களில் எதையேனும் செய்யச் சதி செய்யும் அல்லது மத்திய மாநில அரசு எதற்கேனும் குற்ற வன்முறை மூலமோ அல்லது குற்ற வன்முறையைக் காட்டுவதன் மூலமோ பேரச்சம் விளைவிக்கச் சதி செய்யும் எவரொருவரும், ஆயுள் தண்டனை அல்லது பத்தாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றால் தண்டிக்கப்படுதல் வேண்டும். மேலும் அபராதமும் விதிக்கலாம்.

**பிரிவு - 122 (Section - 122)**

இந்திய அரசுக்கு எதிராகப் போர்தொடுக்கும் உட்கருத்துடன் ஆட்கள், ஆயுதங்கள் அல்லது வெடிமருந்துகளைத் திரட்டுகிற அல்லது போர்தொடுக்கத் தயார் செய்கிற எவரொருவரும், ஆயுள் தண்டனை அல்லது பத்தாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றால் தண்டிக்கப்படுதல் வேண்டும். மேலும் அபராதமும் விதிக்கலாம்.

**பிரிவு - 123 (Section - 123)**

இந்திய அரசுக்கு எதிராகப் போர்தொடுக்கும் திட்டமொன்று இருப்பதைச் செய்கை (act) எதன் மூலமேனும் அல்லது சட்டமுரணான விடுகை (Omission) எதன் மூலமேனும் மறைத்து, அதனால் அத்தகைய போர்தொடுப்பதற்கு வசதி செய்யும் உட்கருத்துடன் அல்லது அவ்வாறு மறைப்பதால் அநேகமாகக் குற்றத்திற்கு வசதியாகும் என்று அறிந்தே, அவ்வாறு மறைக்கின்ற எவரொருவரும், பத்தாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனை வகை ஒன்றால் தண்டிக்கப்படுதல் வேண்டும். மேலும் அபராதமும் விதிக்கலாம்.

**பிரிவு - 124 (Section - 124)**

இந்தியக் குடியரசுத் தலைவர், அல்லது ஒரு மாநில ஆளுநரை, அத்தகைய குடியரசுத் தலைர் அல்லது ஆளுநரின் சட்டப் பூர்வமான அதிகாரங்களில் எதையேனும் எந்த முறையிலேனும் செலுத்தவோ அல்லது செலுத்தாமல் தடைப்படுத்தவோ தூண்டும் அல்லது கட்டாயப்படுத்தும் உட்கருத்துடன், அத்தகைய குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரைத் தாக்குகிற, அல்லது தடைப்படுத்த சட்டவிரோதமாக முயற்சி செய்கிற, அல்லது குற்ற வன்முறை மூலம் அல்லது குற்ற வன்முறையைக் காட்டுவதன் மூலம் பேரச்சம் விளைவிக்கிற அல்லது அவ்வாறு பயமுறுத்த முயற்சி செய்கிற எவரொருவரும், ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனை வகை ஒன்றால் தண்டிக்கப்படுதல் வேண்டும். மேலும் அபராதமும் விதிக்கலாம்.

**பிரிவு - 125 (Section - 125)**

நபர் ஒருவர் இந்திய அரசாங்கத்துடன் கூட்டு அல்லது அமைதி உடன்படிக்கை கொண்டுள்ள ஆசிய நாட்டிற்கெதிராக போர்தொடுத்தல் அல்லது போர்தொடுக்க முயற்சி செய்தல் அல்லது போர்தொடுக்கத் தூண்டுதல் அல்லது அதற்கு உடந்தையாக இருத்தல் போன்ற செயல்களைச் செய்தால் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் மற்றும் அபராதத்திற்கு உள்ளாதலும் வேண்டும்.

**பிரிவு - 126 (Section - 126)**

இந்திய அரசுடன் இணக்கமாகவுள்ள, அல்லது அமைதி உறவு கொண்டுள்ள அரசின் மண்டலங்களில் (கொள்ளையடித்தல்) சூறையாடும் அல்லது சூறையாட முன்னேற்பாடுகள் செய்யும் நபர்களுக்கு ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றால் தண்டிக்கப்படுதல் வேண்டும். மேலும் அபராதமும் விதிக்கலாம். அவ்வாறு சூறையாடப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்த உட்கருத்து கொள்ளப்பட்ட அல்லது சூறைாடலால் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை தண்ட இழப்பீடிற்கு உள்ளாதல் வேண்டும்.

**பிரிவு - 127 (Section - 127)**

பிரிவுகள் 125 & 126 ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள குற்றங்களில் எதையேனும் செய்ததால் கிடைத்த சொத்து என்று தெரிந்தே, அதில் எதையேனும் பெற்றுக் கொள்ளும் எவரொருவரும்

ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றால் தண்டிக்கப்படுதல் வேண்டும். மேலும் அபராதமும் விதிக்கலாம். அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட சொத்துக்களை தண்ட இழப்பீடிற்கு உள்ளாதல் வேண்டும்.

**பிரிவு - 128 (Section - 128)**

ஒரு பொது ஊழியராக இருப்பதோடு அரசுக் கைதி அல்லது போர்க் கைதி எவரையேனும் பொறுப்பில் கொண்டிருந்தது,அத்தகைய கைதி அடைத்து வைக்கப்பட்டிருக்கும் எந்த இடத்திலிருந்தும் தப்பிச் செல்ல தன்னிச்சையாக அனுமதிக்கும் எவரொருவரும், ஆயுள்தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய சிறைத்தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றால் தண்டிக்கப்படல் வேண்டும். மேலும் அபராதமும் விதிக்கப்படலாம்.

**பிரிவு - 129 (Section - 129)**

ஒரு பொது ஊழியராக இருப்பதோடு அரசுக் கைதி அல்லது போர்க் கைதி எவரையேனும் பொறுப்பில் கொண்டிருந்தது, அத்தகைய கைதி அதைத்து வைக்கப்பட்டிருக்கும் எந்த இடத்திலிருந்தும் தப்பிச் செல்ல அசட்டையாக விட்டு விடுகிற எவரொருவரும், மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்கு மெய்க்காவல் சிறைவாசம் விதித்துத் தண்டிக்கப்படல் வேண்டும். மேலும் அபராதமும் விதிக்கப்படலாம்.

**பிரிவு - 130 (Section - 130)**

ஒரு பொது ஊழியராக இருப்பதோடு அரசுக் கைதி அல்லது போர்க் கைதி எவரையேனும் சட்டப்பூர்வமான பாதுகாப்பினின்றும் தப்பிச் செல்ல அறிந்தே உதவி செய்கிற அல்லது தப்பிச் செல்ல துணைபுரிகிற அல்லது அத்தகைய கைதியை மீட்கிற அல்லது மீட்க முயல்கிற அல்லது சட்டப்படியான பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்ற அத்தகைய கைதிக்குப் புகலளிக்கிற அல்லது அவரை மறைத்து வைக்கிற அல்லது அந்தக் கைதியை மீண்டும் பிடிப்பதை எவ்வகையிலும் தடைப்படுத்த முனைகிற அல்லது முயற்சி செய்கிற எவரொருவரும், ஆயுள்தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய சிறைத்தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றால் தண்டிக்கப்படல் வேண்டும். மேலும் அபராதமும் விதிக்கப்படலாம்.

(தொடரும்)

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**

**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**

39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.

**✆ : 9841446621**

**tnebemployeesfederation3600@gmail.com**

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*



# காலையில் என்ன சாப்பிடலாம்?

மருத்துவர் கு. சிவராமன்

நன்றி : 'முதுமை எனும் பூங்காற்று'

பல வீடுகளில் காலை உணவு என்பது ஓர் ஒழுங்குமுறையில் இருப்பதில்லை. அதிலும் பள்ளி, கல்லூரி போகும் பிள்ளைகள் மிகவும் மோசம். காலையில் எழுந்தவுடன் கண்ணாடியைப் பார்ப்பார்கள், அப்போதுதான் யோசிப்பார்கள்; தொப்பை இருக்கிறது; கொஞ்சம் குறைக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு, பலர் காலை உணவைத் தவிர்த்துவிடுகிறார்கள். காலை உணவு மிகவும் முக்கியம். காலை உணவை யார் மிகச் சிறப்பான முறையில் சரியாக எடுக்கிறார்களோ அவர்களுக்குப் புத்திசாலித்தனம், நோய் எதிர்ப்பாற்றல் ஆகியவை சரியாக இருக்கும்.

ஆசாரக்கோவை என்ற தமிழ் நூலில்'காலையில் தித்திப்பான பழங்கள் அல்லது ஆவியில் வெந்த உணவு' ஆகியவையே மிகச் சிறப்பான காலை உணவு என்று குறிப்பிட்டுள்ளனர். தித்திப்பாக உள்ள பழங்களில் வாழைப்பழம் மிகவும் நல்லது. காலையில் உணவு சமைக்கத் தாமதமானால், இரண்டு வாழைப்பழம், ஒரு கொய்யாக்கனி சாப்பிட்டுச் செல்லலாம். சிறிது நிதானமாகச் சென்றால் இரண்டு பழம், கொஞ்சம் சிவப்பரிசி அவல், இட்லி, பொங்கல் எடுத்துக் கொள்ளலாம். காலை உணவாக ஆவியில் வெந்த உணவும், பழங்களும் எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக வீட்டில் குழந்தைகள் இருந்தால் நிச்சயம் அவர்களுக்கு இவற்றைக் கொடுக்க வேண்டும்.

காலைச் சிற்றுண்டியாக மிகச் சிறப்பான உணவுகள் நம்முடைய பழக்கத்திலேயே இருக்கின்றன. சாதாரணமாக எளிதில் ஜீரணிக்கக்கூடிய உணவைத்தான் காலைச் சிற்றுண்டியாக எடுக்க வேண்டும். காலையிலேயே எண்ணெயில் பொரித்த பூரி, பரோட்டா போன்றவற்றை உண்பது தவறு. ஆவியில் வெந்த இட்லி, இடியாப்பம், பொங்கல் போன்ற உணவுகளே மிகவும் சிறப்பானவை. ஆரோக்கியமானவை. பலரும் இட்லியில் என்ன இருக்கிறது என்று நினைக்கிறார்கள். உலக அளவில் பிரபலமான உணவியல் வல்லுநர் கே.டி. அட்சயா, ''உலகில் உள்ள பல்வேறு உணவுகளில் சீனா, லத்தீன், அமெரிக்கா, மேற்கத்திய உணவுகள் ஆகியவற்றுள் மிகச் சிறந்த உணவு இட்லி'' என்கிறார். அவர் மிகச் சிறந்த உணவு ஆராய்ச்சியாளராகத் திகழ்பவர். அவர் அவ்வாறு கூறுவதற்கு என்ன காரணம்? இட்லிக்குப் பயன்படுத்தும் மாவில் உடலுக்கு நன்மை தரக்கூடிய பல்வேறு பாக்டீரியாக்கள் உள்ளன. இட்லியானது நம்முடைய பசியை ஆற்றுவதோடு, புரோபயோடிக் என்றழைக்கப்படும், உடலுக்கு உள்சென்று நன்மை செய்யக் கூடிய பாக்டீரியாக்களையும் சேர்த்துத் தருகிறது. அதேபோல, புளித்து, ஊறவைத்து, அரைத்து எடுக்கக்கூடிய இட்லி போன்ற உணவுகளும், பொங்கல் போன்ற சமச்சீர் உணவும் மிகவும் நல்லவை. பொங்கலில் அரிசி, பருப்பு, கொழுப்புக்கான நெய் போன்ற சமச்சீர் பொருள்கள் உள்ளன. காலை உணவைத் தவிர்ப்பதோ, எளிதாகக் கடையில் கிடைப்பவற்றை வாங்கி உண்பதோ நம் ஆரோக்கியத்தை நாமே கெடுத்துக் கொள்வதாக ஆகிவிடும்.

காலை உணவாக என்ன சாப்பிடுகிறீர்கள் என்று 70 வயது முதியவர் வரை யாரைக் கேட்டாலும் ஓட்ஸ் சாப்பிடுவதாகக் கூறுகிறார்கள். மேலும், 'ஓட்ஸ் சாப்பிட்டால் உடம்பு இளைக்குமாமே!' என்கின்றனர். 15-20 ஆண்டுகளுக்கு முன்பு வரை ஓட்ஸ் என்றால் யாருக்குமே தெரியாது. ஜெனீவாவில் இருக்கும் உணவு மற்றும் வேளாண் அமைப்பில் எது மிகச் சிறந்த காலை உணவு என்று பட்டியல் தயாரித்தார்கள். ஜெர்மனி, சீனா, மத்திய தரைக்கடல் உணவுகள் என்று உலகின் எல்லா உணவுகளையும் ஆராய்ந்து எது மிகச் சிறந்த காலை உணவு என்று பட்டியலிட்டார்கள். எது இளைஞர்களுக்கு ஏற்றது? எது வயதானவர்களுக்கு ஏற்றது? எதைக் குழந்தைகளுக்குக் கொடுக்க முடியும்? எதை நோயுற்றவர்களுக்கும் கொடுக்க முடியும்? இப்படி ஒரு பெரிய பட்டியலிட்டார்கள்.

கே.டி. அட்சயா எழுதிய 'Ancient Indian Food' என்ற நூலை ஆக்ஸ்போர்டு பப்ளிகேஷனில் வெளியிட்டுள்ளனர். அவ்வளவு அருமையான புத்தகம். இவர் பட்டியலிட்ட ஓர் உணவைத்தான் எல்லாத் தரப்பினருக்கும் சிறந்தது என்று தேர்ந்தெடுத்தார்கள். அந்த உணவு நம் ஊர் இட்லி. விளையாட்டுக்குச் சொல்லவில்லை; அல்லது எனக்கு இட்லியின் மீது இருக்கும் பிரியத்தால் சொல்லவில்லை. அந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் அனைவரும் சுவிட்சர்லாந்தில் வேலை செய்த ஜெர்மானியர்கள். அவர்கள், 'இதில் மிகச் சீரான அளவில் Recommended dietary allowance என்று சொல்லக்கூடிய பொருள்கள் இருக்கின்றன. இதில் புரதம், கார்போஹைட்ரேட், ஃபைபர் அளவுகளும், உடலுக்கு நன்மை செய்யும் புரோபயாடிக் அளவுகளும் சரியான அளவில் இருக்கின்றன... இவையெல்லாம் அந்த இந்திய மக்களுக்கு எப்படித் தெரியும்?' என்று கேள்வி எழுப்புகிறார்கள். அன்றைக்கு இருந்த நம் தமிழ்க்குடிக்கு புரோபயாடிக்ஸ் தெரியாது. அன்றைய மக்களுக்கு தெரிந்ததெல்லாம் அறம் மட்டுமே. இந்த உணவைச் சாப்பிட்டால் என் குழந்தை நன்றாக இருக்கும்; என் சமூகம் நன்றாக இருக்கும் என்று அந்த மக்களுக்குத் தெரியும். அவ்வளவு நேர்த்தியாகத்தான் ஒவ்வொரு உணவையும் தமிழ்ச் சமூகமும் இந்தியச் சமூகமும் தேர்ந்தடுத்திருக்கிறது. ஆகவே, இட்லி சாப்பிடுவோம்!

## வாய்மொழி உத்தரவு செல்லுமா... இல்லை தொழிலாளியின் வாழ்க்கையை கொல்லுமா...

செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டத்தில் பணியாற்றும் மின்சாரத் தொழிலாளர்கள் ஊழியர்கள் சிலர் அதிகாரிகளின் வாய்மொழி உத்தரவின் அடிப்படையில் இரண்டு ஆண்டுகளாக கோட்டம் விட்டு வேறு கோட்டத்தில் கணக்கீட்டாளர்கள், கணக்கீட்டு ஆய்வாளர் மற்றும் கம்பியாளர், மின்பாதை ஆய்வாளர் கோட்டத்திற்குள்ளேயும் பணியாற்றி வருகின்றனர், வருவாய் பிரிவு பணியாளர்கள் மீதோ, அல்லது மின்ஊழியர்கள் மீது ஏதாவது குற்றம் சாட்டப்பட்டாலோ, மின்விபத்து ஏற்பட்டாலோ வாய்மொழி உத்தரவின்பேரில் அனுப்பப்பட்ட அதிகாரிகள் அதற்கான பொறுப்பை ஏற்று தொழிலாளியை காப்பாற்றுவார்களா.. என்பதும் மின்தொழிலாளியின் வாழ்க்கை நிலை என்னவாகும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டிய நிலை உள்ளது. பணியாளர்கள் குறைவாக உள்ளனர் பணிகள் தேங்கி கிடக்கிறது என்று காரணம் கூறப்பட்டாலும் உத்தரவின்பேரில் மட்டுமே அனுப்பப்பட வேண்டும் என்றும் தொழிலாளியின் நலன் கருதி TNEBEF முன்வைப்பதை நிர்வாகம் ஏற்று செயல்படுமா...?

**பா. நாகப்பிள்ளை,** செயலாளர், செங்கை மின்திட்டம்

# இனியொரு விபத்தோ உயிரிழப்போ நடந்தால்...!

**சி**வகங்கையில் மார்ச் 3ம் தேதி திரு. காளிராஜ் என்ற கேங்க்மேன் விபத்தில் சிக்கி படுகாயமடைந்து மதுரையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது எத்தனையாவது விபத்து என்பதை வாரியம்தான் சொல்ல வேண்டும். பலமுறை எழுதியும், பேசியும் பார்த்துவிட்டோம்.

வாரியத்தின் நினைவில் கேங்க்மேன் உயிர் என்பது கேவலத்திற்குரியாகிவிட்டது. இறப்பு எண்ணிக்கை அதிகமாகிறது, விபத்து எண்ணிக்கை அதிகமாகிறது என்றெல்லாம் கூக்குரலிட்டாலும் செவிடன் காதில் ஊதிய சங்காக உள்ளது என்று கிராமப்புறத்தில் சொல்வார்களே அதுபோல உள்ளது.

மின்சாரம் செல்கின்ற மின்பாதையில் ஏன் பணி செய்ய வற்புறுத்துகிறார்கள். 11 KV, 33 KV மின்பாதைகளில் யார் பணி செய்ய நிர்பந்திப்பது? கேங்க்மேன் வேலைக்கு எடுக்கின்றபோது என்ன சொல்லப்பட்டதோ அதை ஏன் மீறுகிறது வாரியம்!

பிரிவு அலுவலர்களுக்கு அல்லது வேலை மேற்பார்வை செய்பவர்களுக்கு இந்த அதிகாரத்தை தருவது யார். இன்றும் எத்தனை பேர் விபத்தில் சிக்கி காயமடைய வேண்டும், உயிர்விட வேண்டும் என வாரியம் எண்ணுகிறது என்பதே புரியாத புதிராக உள்ளது.

கடந்த பிப்ரவரி 9ம் நாள் கேங்க்மேன் தொழிலாளர்களுக்கான கோரிக்கை நாளாக தமிழகம் முழுதும் சுவரொட்டி ஒட்டி உடனடியாக நிறைவேற்றக் கோரி வலியுறுத்தினோம்.

கேங்க்மேன்களுக்குண்டான விடுப்பு காலம் மற்றும் சலுகைகள் ஏற்கனவே களஉதவியாளர்களுக்கு நடைமுறையில் உள்ளதை அளிப்பதற்கே வாரியக் கூட்டத்தில் முடிவெடுக்க வேண்டுமென கோர்ப்பை கிடப்பில் போட்டுவிட்டு வைத்துள்ளார்கள்.

குழிதோண்ட, கம்பம் நட, கம்பி இழுக்க மட்டும்தான் பயன்படுத்துவோம் என்று நீதிமன்றத்திற்கு சத்திய பிரமாணம் செய்து தந்ததெல்லாம் காற்றில் பறந்து போனதா?

**இன்னொரு உயிரிழப்பு ஏற்பட்டால் வாரியம் எதிர்கொள்ள வேண்டியது ஏராளமாகிடும் என அறிவுறுத்தியும் கூட அலுவலர்களுக்கு புரிந்ததாக இல்லை. சொந்த மாவட்டத்திற்கு திரும்ப அனுப்புவதற்கு என்ன தயக்கம் வாராந்திர விடுப்பு அளிக்கவோ, 8 மணி நேரத்திற்கு மேல் வேலைவாங்காமல் இருக்கவா முடியாதா?**

மின்சார வாரியத்தில் அனைத்து பதவிகளுக்கும் 3 மாதம் பயிற்சிக் காலம் என்றுள்ள நேரத்தில் இரண்டாண்டு பயிற்சிக் காலம் என்பது இருபத்திரண்டாம் நூற்றாண்டில் ஏமாற்று வேலையல்லவா?

அடிமைபோல் நடத்திடுவது என்பது ஆரோக்யமான செயல்பாடாக அமையாது என்பதை வாரியம் உணர்ந்து கொண்டு நாம் பிப்ரவரி 9ம் நாள் கடைபிடித்த கோரிக்கைகளில் உள்ள கோரிக்கைகள் வாரியம் நிறைவேற்றிட விரைந்து நடவடிக்கை எடுத்திட முன்வருமென நம்புவோமாக.

## TANJORE EDC OFFICE BEARERS

| | | |
|---|---|---|
| *President* | : | **T. MOHANDASS,** Stores Supervisor (Rtd.), ✆ : 9442887562<br>Kumbakonam Division, Tanjore EDC |
| *Secretary* | : | **M. RAJA,** Junior Engineer 2nd Grade ✆ : 8903060177<br>o/o AEE/110KVSS/Thirukanoor Patty<br>Thanjavur Division, Thanjore EDC |
| *Treasurer* | : | **U. KANAGARAJ,** Junior Engineer 2nd Grade, ✆ : 9626951664<br>o/o AEE/110KVSS/Veeramarasan Pettai,<br>Thanjavur Division, Thanjore EDC |
| *Organasing Secretary* | : | **T. KARUNANITHI,** Wireman<br>o/o AE/O&M/North/Tanjore, Thanjavur Division, Thanjore EDC |

## போராட்ட பாதையில் ஒப்பந்த தொழிலாளர்கள்...!

**ஒ**ப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் பேச்சுவார்த்தை நடத்துங்கள் என்கிறோம்! வாரியம் அமைதியாகவே உள்ளது!

ஒப்பந்த தொழிலாளர்கள் யார் என்று கேட்கிறது வாரியம்! யாரிடத்தில் வேலை செய்கிறார்கள் என்றும் கேட்கிறது! கூடுதலாக எங்களுக்கும் அவர்களுக்கும் என்ன சம்மந்தம் என்று கேட்கிறது! ஒருபுறம் நினைத்து பார்த்தால் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. 8.8.98ல் அடையாளம் கண்டது ஒப்பந்த தொழிலாளர்களைத் தானே! இதற்கு முன்னர் 5 வருடம் பணி செய்திருந்தால் கருணைத்தொகை (Bonus) வழங்கியதும் ஒப்பந்த தொழிலாளர்களுக்குத் தானே! இல்லை என்று சொல்லலாம் வாரியம்! வாரியத்திற்கென்ன வேலை நடந்தால் சரி - யார் செய்கிறார்கள் என பார்ப்பது என் வேலையில்லை என்று கூட சொல்லலாம். 18006பேர் காலித் கமிஷன் அடிப்படையில் பணி நிரந்தரம் செய்திட நீதிமன்றம் உத்திரவிட்டதை மறந்துவிட்டார்கள் போலும்!

பின்னர் 10.08.2007ல் 21600 பேர் நிரந்தரம் செய்யப்பட்டார்களே இவர்கள் யார்! 2005 மற்றும் 2006 இரு ஆண்டுகளில் இரு ஆட்சியும் இருந்தபோது கருணைத் தொகை வழங்க எடுத்துக் கொண்ட வழிகாட்டு முறைகள் என்ன? வாரியத்திற்கு மறந்து போய்விட்டதா.

21600 பேர் நிரந்தரம் பெற்றதற்கு பிறகும் விடுபட்டவர்களை பணிக்கமர்த்திக் கொள்ள 20.02.2008ல் உத்திரவிட்ட வாரியத்திற்கு என்ன மறதி வந்தது இன்று என்றுதான் தெரியவில்லை.

BP 9ன் அடிப்படையில் அடையாளங்காணுதற்கு குழு அமைக்கப்பட்ட வரலாறு ஏன் மூடி மறைக்கப்படுகிறது.

BP 9 தேதி 9.1.2008யிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது. இது இருந்தால் தானே இதை வைத்துக் கேட்பார்கள், ரத்து செய்யுங்கள் என்றார் பங்கஜ்குமார் தலைமை பொறியாளர் பணியமைப்பு அலுவலகமும் கண்ணை மூடிக் கொண்டு ஆர்வமாக ரத்து செய்துள்ளது.

20000க்கு மேற்பட்ட காலியிடங்களில் பணி செய்வது யார், K2, Chit Agreementல் பணிபுரிவார்கள் மின்சார வாரியத்திற்கு சம்மந்தமில்லை என்று கூற முடியுமா? மின்சார

வாரியத்திற்குண்டான பணிகளை செய்கிறார்களா அல்லது வேறு எந்த வேலையை செய்ய சொல்கிறார்கள் என்பதை யார் சொல்வது!

பிரிவு அலுவலகத்தில் பணிகள் எப்படி நடைபெறுகிறது. எத்தனை ஒப்பந்த தொழிலாளர்கள் ஒப்பந்தம் வழியே பணி செய்கிறார்கள். ESI, PF தந்துவிட்டால் எல்லாம் முடிந்துவிட்டது என்று அர்த்தமா?

480 நாட்கள் தொடர்ந்து பணி செய்திருந்தால் 1981 Tamilnadu Industrial Establishment Conferment of permanent status to workman Actபடி மின்சார வாரியம் வேலை அறிக்கை வேண்டிய அவசியம் வந்துள்ளது. இதுபோன்று உள்ளவர்களைத் தானே 20.02.2008ல் உத்தரவிட்டு பணியில் தொடரச் செய்தது வாரியம். இன்று மின்சார வாரியத்திற்கும் இவர்களுக்கும் சம்மந்தமில்லை என்று சொல்வதில் நியாயம் என்ன இருக்கிறது.

வழக்கறிஞருக்கு செலவழித்த பணத்தில் பாதி கூட வந்திருக்காது பணியாற்றி வரும் ஒப்பந்த தொழிலாளர்கள் 20.02.2018 ஒப்பந்தத்தில் உள்ள தினஊதியம் ரூ. 380/- வழங்கியிருந்தால்!

வாரியத்திற்காக உழைத்துக் கொண்டிருப்பவர்களை ஒரு பக்கம் விட்டுவிட்டு வாரியம் நகர்ந்து சென்றுவிடலாம் என்றால் அது நடக்காது.

மின்சார வாரியம் தொழிற்சங்கங்களுக்கு பேசி சுமூகமான முறையில் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முன் வரவேண்டும் என்கின்ற எதிர்பார்ப்பு தொழிலாளர் மத்தியில் உள்ளது என்பதை வாரியம் புரிந்து செயல்பட வேண்டிய கட்டாயம் உள்ளது என்பதை அறிந்திட மறுத்தால் போராட்டத்தை எதிர்கொள்ள நேரிடும்!

## பகுதி நேரப் பணிக்கு பெண்களை நியமித்திடுக!

**மி**ன்சார வாரியத்தில் சுமர் 1000 அலுவலகங்களுக்கு சுகாதாரப் பணி செய்ய பணியாளர்களை அனுமதிக்காமல் வாரியம் காலந்தாழ்த்துவது சரியா? சம்பளமில்லாமல் வாரியம் வேலை தரும் என்று நம்பி கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் பெண்கள் பணி செய்து வருகிறார்களே அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமா!

தலைமை பொறியாளர் (பணியமைப்பு) அலுவலகத்திலிருந்து விவரங்களை கேட்டு பெற்று வருடக்கணக்கில் ஆகிறதே! ஏன் பணி உத்தரவு வழங்க தாமதம்! அவுட்சோர்சிங் செய்திட ஆர்வம் கொண்டுள்ள மனநிலை இருந்தால் வாரியம் மாற்றிக் கொள்ள வேண்டும். பெண்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்கள், கைம்பெண்கள், கைவிடப்பட்டோர் போன்றவர்கள் இப்பணியை நம்பி மின்சார வாரியத்திற்கு இலவசமாக உழைத்துக் கொண்டிருக்கிறார்களே இவர்களுக்கு வேலை தர வேண்டாமா?

கழிவறை சுத்தம் செய்ய, தண்ணீர் எடுக்க, வாசல் கூட்டி பெருக்க இவர்களை விட்டால் யார் உளர் என வாரியம் சொல்ல வேண்டும்.

வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளோரின் உழைப்பை சுரண்டுது அநாகரிகமான செயல் என்பதை உணர்ந்த உடன் அனைவருக்கும் பணி நியமன உத்தரவு வழங்கிடுக.

# திருப்பூர் வட்டம் அவிநாசி கோட்ட செயற்பொறியாளரின் தொடரும் அராஜக போக்கு!

பொறிஞர் விஜயேஸ்வரன் அவர்கள் திருப்பூர் வட்டம் அவிநாசி கோட்டத்தில் 2019ம் ஆண்டில் செயற்பொறியாளராக பணியேற்பு செய்தார். அவர் பணியேற்பு செய்த நாள் முதலே தனது அதிகாரத்தை தொழிலாளர்கள் மீது துஷ்பிரயோகம் செய்தார். அதாவது பணியேற்ற ஒரு சில தினங்களிலே வணிக ஆய்வாளர், வணிக உதவியாளர், முகவர் முதல் நிலை ஆகியோரை அழைத்து ஒரு மீட்டிங் ஏற்பாடு செய்து சிறப்பாக செயல்படுங்கள் என்று உற்சாகப்படுத்தாமல் அனைவரையும் தொலைத்து விடுவேன், சஸ்பெண்ட் செய்து விடுவேன் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து விடுவேன் என்று ஒரு சர்வாதிகாரி போல பேசியுள்ளார். இது தொழிலாளர்கள் மத்தியில் மிகுந்த மனஉளைச்சலையும், மனவேதனையையும் ஏற்படுத்தியது என்று சொன்னால் அது மிகையாகாது. அப்பொழுதே அவர் மீது தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொண்டு இருக்க வேண்டும். ஆனால், இங்கு உள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் அவர் மீது நடவடிக்கை எடுக்க அப்போது தவறிவிட்டன. அதனாலோ என்னவோ அவரது அராஜக போக்கு தொடர்ந்து அனைவரையும் மரியாதை குறைவாக ஒருமையில் வாய்க்கு வந்தபடி எல்லாம் பேசும் அளவிற்கு அவருக்கு பழகிவிட்டது. அதன் பிறகு தொழிற்சங்க நிர்வாகி என்று தெரிந்தும் மரியாதை குறையாக நீ என்ன லுசா, அறிவு இருக்கா என்றெல்லாம் பேசினார். சமீப காலங்களில் தினமும் மீட்டிங் வைத்து பிரிவு அலுவலர்களை படாதபாடுபடுத்தி வந்தார். அதன் உச்சகட்டமாக இரவு 8.00 மணிக்கு மீட்டிங் ஆரம்பித்த இவு 11.00 மணி வரை மீட்டிங் நடத்தி TNERC விதிகளுக்கு புறம்பாக மீட்டிங் நடத்தினார். இதனை மேற்பார்வை பொறியாளர் திருப்பூர் அவர்களின் கவனத்திற்கு நமது தொழிற்சங்கத்தின் சார்பாக கொண்டு செல்லப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்ட மேற்பார்வை பொறியாளர் / திருப்பூர் அவர்கள் செயற்பொறியாளர்/ அவிநாசி அவர்களிடம் இனி இதுபோன்று இரவு நேரங்களில் மீட்டிங் நடத்த வேண்டாம் என அறிவுரை வழங்கியுள்ளார். செயற்பொறியாளர் / அவிநாசி அவர்களும் அப்பொழுது இரவு 7.30 மணியளவில் நடந்து கொண்டு இருந்த மீட்டிங்கில் மீட்டிங் முடிந்தது கிளம்புங்கள். இனி மீட்டிங் நடத்தமாட்டேன் என கூறி மீட்டிங்கை முடித்து உள்ளார். அதன் பிறகு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் புகாரின் அடிப்படையில்தான் மேற்பார்வை பொறியாளர் / திருப்பூர் அவர்கள் அறிவுரை வழங்கி உள்ளார் என தெரிந்த பிறகு அவருடைய ஆட்டம் அதிகமானது. மேற்பார்வை பொறியாளர் சொன்னாலும் கேட்கமாட்டேன், யார் சொன்னாலும் கேட்கமாட்டேன் தொழிற்சங்கம் என் கால் தூசுக்கு சமம் அனைவரையும் தொலைத்து விடுவேன் என மிரட்டியுள்ளார். இதற்கு மேலும் பொறுத்து கொள்ள முடியாது என்ற நிலை வந்த பிறகுதான் கடந்த 05.02.2022 அன்று புகாரை கடிதமாக மேற்பார்வை பொறியாளர் / திருப்பூர் அவர்களுக்கு கடிதமாக அவர்மீது நடவடிக்கை எடுக்கக் கோரி வழங்கப்பட்டது. கடிதத்தின் நகல் தலைமைப் பொறியாளர் / கோவை மண்டலம் அவர்களுக்கும் வழங்கப்பட்டது. ஆனால், எவரும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை, அதன் பிறகு 26, 27.02.2022 அன்று நடந்த நமது மாநில செயற்குழுவில் செயற்பொறியாளர் / அவிநாசி அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வாரியத்தை வலியுறுத்துவது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்தின் அடிப்படையில் செயற்பொறியாளர் / அவிநாசி அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வாரியத்தை வற்புறுத்துகிறோம்.

- **சதீஸ்சங்கர்** செயலாளர்
திருப்பூர் மின்வட்டம்

# காடம்பாறையில் உதயமானது தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டிபோர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்

**தெ. சாமுவேல் ஜான்சன்,** மாநில இணைச் செயலாளர்

காடம்பாறை மின் உற்பத்தி வட்டத்தில் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் கிளையை வலுவானதாக அமைக்க மேற்கொள்ளப்பட்ட பல கட்ட முயற்சிக்கு இன்று பலன் கிடைத்துள்ளது.

பொதுச்செயலாளர் அவர்களின் ஆலோசனையின்படி முதற்கட்டமாக திட்ட அளவில் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். இதற்கு சென்னை தலைமைக் கிளையின் செயலாளரும் மாநில இணைச் செயலாளருமான திரு. K. சம்பத் அவர்களும், மாநில உபதலைவர் திரு. சக்திவேல் உடுமலை அவர்களும் உறுதுணையாக இருந்தனர். திட்ட அளவிலான பொறுப்பாளர்களாக திரு. C. சரவணன் (தலைவர்) திரு. P.S. சாம் முருகேசன் (செயலாளர்) S. முத்துக்குமார் (பொருளாளர்) திரு. S. நிலவழகன் (அமைப்பு செயலாளர்) அவர்களும் பதவியேற்றனர்.

அதன் பிறகு மாநில பொருளாளர் திரு. J.L. பாஸ்டின்ராஜ் மற்றும் மாநில உபதலைவர் அய்யா A. கண்ணாதுரை அவர்களின் வழிநடத்துதலோடு ஒரு குழுவாக திரு. S. சதீஸ் சங்கர் மாநிலச் செயலாளர், திரு. S. மோகன் மாநில உபதலைவர், திரு. I. லியோபால் பொருளாளர், கோவை தெற்கு மற்றும் திரு. முருகவேள் செயலாளர், திரு. G. அங்குராஜ் மாநில இணைச் செயலாளர், திரு. மகேஷ் மற்றும் மகளிர் அணியில் இருந்து மாநில செயலாளர், திருமதி. M. பாரதி உட்பட திருமதி. M. ரோஸ்பின் ராணி, திருமதி. M. கவிதா, திருமதி. லீமா ரோஸ், திருமதி. R. யோகசித்ரா ஆகியோருடன் காடம்பாறை மின் உற்பத்தி வட்ட தலைமையிடமான மின்பாறை மற்றும் காடம்பாறை அப்பர் ஆழியாறு ஊழியர்களையும் பொறுப்பாளர்களையும் சந்தித்து பேசினோம்.

ஒரு சில தொழிலாளர்கள் நமது தொழிற்சங்கத்தில் இணைய விருப்பம் தெரிவித்தனர். அதன் பிறகு நவம்பர் 8, 2021 அன்று காடம்பாறை மின் உற்பத்தி வட்ட மத்திய அலுவலகத்தில் எம்ப்ளாயீஸ் பெடரேஷனுக்கான நன்கொடை ஊதியத்தின் பிடித்தம் செய்வதற்கான முறைகளை மேற்கொண்டு பணியாளர்களிடம் கையொப்பம் பெற்றோம் இதில் பல எதிர்ப்புகளை சந்தித்தோம்!

தொடர்ந்து நமது தொழிற்சங்க செயல்பாடுகள் இயக்கப் பணிகள் மற்றும் டிசம்பர் 10.12.2021, 11.12.2021, 12.12.2021 ஆகிய தேததிகளில் திருச்சியில் நடைபெற்ற மாநில பொதுக்குழு விபரங்கள் முகநூல் கட்செவி அஞ்சல், குறுஞ்செய்தி மூலமாக காடம்பாறை மின் உற்பத்தி வட்ட பொறுப்பாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் தெரிவித்து வந்தோம். மாநில பொருளாளர் அவ்வப்போது காடம்பாறை கிளை நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி வந்தார்.

அதன் பிறகு கடந்த 20.01.2022 அன்று மாநில பொருளாளர் தலைமையில் காடம்பாறை சென்று மேற்பார்வைப் பொறியாளர் உட்பட அனைத்து அலுவலர்களுக்கும் நாட்குறிப்பு மற்றும் நாட்காட்டி கொடுத்து புத்தாண்டு வாழ்த்து கூறினோம். அப்போது திரு. A. ஹரிதாஸ் முன்னாள் அண்ணா தொழிற்சங்க செயலாளர் தன்னை எம்ப்ளாயீஸ் பெடரேஷனில் இணைத்துக் கொண்டார். இதனிடையே அவ்வப்போது காடம்பாறை மின்நிலைய பணியாளர்கள் நமது தொழிற்சங்கத்தில் இணைவது தொடர்பாக பேசி வந்தனர்.

மீண்டும் மாநில பொருளயாளர் தலைமையில் 12.02.2022 அன்று காடம்பாறை மின் உற்பத்தி வட்ட தலைமையிடமான மின்பாறையில் திரு. A. முகமது ராபி சிறப்பு நிலை முகவர் தலைமையில் ஒரு குழுவை சந்தித்தோம் அவர்கள் தமிழக அளவில் நமது எம்ப்ளாயீஸ் பெடரேஷன் செயல்பாடு சிறப்பாக இருப்பதாக தெரிவித்தனர்.

மாற்று சங்கங்களில் இருந்து பலர் நமது எம்ப்ளாயீஸ் பெடரேஷனால் இணைய இருப்பதாகவும் அதற்கான ஏற்பாடுகள் காடம்பாறை மின்நிலைய முகாம் மற்றும் சர்க்கார்பதி மின்நிலைய முகாமில் செய்து வருவதாகவும் தெரிவித்தனர். அப்போது நமது தொழிற்சங்க கொடி மற்றும் பெயர் பலகையை திறந்து வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். பெயர் பலகை மற்றும் கொடிக்கம்பம் நிறுவுதலுக்கான பணிகளை திரு. A. முகமது ராபி சிறப்பு நிலை முகவர் அவர்கள் தலைமையில் மேற்கொண்டு வந்தனர். அவ்வப்போது புகைப்படங்களை அனுப்பி வந்தனர். முழுவதும் நமது உறுப்பினர்களே அனைத்து பணிகளும் மேற்கொண்டனர்.

கடந்த 03.03.2022 அன்று இரவே செயலாளர் திரு. P.S. சாம் முருகேசன் மற்றும் செயல்தலைவர் திரு. A. ஹரிதாஸ் அவர்களுடன் காடம்பாறை மின்நிலையம் சென்று ஆயத்தப் பணிகள் மேற்கொண்டோம்.

4.03.2022 அன்று காடம்பாறை மின் உற்பத்தி வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களை சந்தித்துவிட்டு காடம்பாறை மின்நிலைய முகாமிற்கு சென்ற எங்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டு நல்லதொரு மதிய உணவும் வழங்கப்பட்டது. இம்முறை ஏற்கனவே சென்றவர்களுடன் கூடுதலாக கோவை மெட்ரோவில் இருந்து R. கணேசன் தலைவர், திரு. மகேஷ் அவர்களும், திரு. R. சிவப்பிரகாஷ் பொருளாளர் ஆகியோரும் இணைந்து ஏழு மகிழ்வூந்துகளில் சென்றிருந்தோம். தொழிற்சங்க பெயர் பலகையை மாநில உபதலைவர் திரு. A. கண்ணாதுரை அவர்கள் திறந்து வைத்தார். தொழிற்சங்க கொடியை திரு. J.L. பாஸ்டின்ராஜ் மாநில பொருளாளர் அவர்கள் ஏற்றினார்.

வான வேடிக்கையுடன் பட்டாசுகள் வெடித்து இந்த வரலாற்று நிகழ்வை மகிழ்வுடன் செய்தர்கள். அதன் பிறகு மாநில செயலாளர் திரு. S. சதீஸ் சங்கர், திருமதி. M. பாரதி மாநில செயலாளர், திரு. A. கண்ணாதுரை மாநில உபதலைவர், திருமதி. M. கவிதா மாநில இணைச் செயலாளர், திரு. R. கணேசன் தலைவர், திரு. R. சிவப்பிரகாஷ் பொருளாளர், திரு. S. மோகன் மாநில உபதலைவர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திரு. A. முகமது ராபி அவர்கள் வரவேற்று பேசினார். திரு. A. ஹரிதாஸ் செயல் தலைவர் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. காடம்பாறை மின்உற்பத்தி வட்ட செயலாளர் , செயலாளர் உரையை நிகழ்த்தினார். தலைவர் திரு. C. சரவணன் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது. சிறப்பு விருந்தினர்களாக திரு. A. சுப்ரமணியன் நிர்வாக அலுவலர் அங்கலகுறிச்சி, திருமதி. R. சசிகலா செயலாளர், உடுமலை திரு. E. சதாசிவம், பொருளாளர் திரு. A. அய்யப்பன் இ.நி.உ அவர்களும் கலந்து கொண்டனர்.

அதன் பிறகு 5.03.2022 காலையில் நவமலை முகாமிற்கு சென்று பணியாளர்களை சந்தித்த பின்னர் பிற்பகல் சர்கார்பதி மின்நிலையம் சென்றோம். அங்கும் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன, ஏற்பாடுகளை திரு. S. நிலவழகன் அமைப்பு செயலாளர் உள்ளிட்டோர் செய்திருந்தனர். திரு. J.L. பாஸ்டின்ராஜ் மாநில பொருளாளர் அவர்கள் கொடியேற்றி சிறப்புரையாற்றினார், அனைவரின் வாழ்த்துரைக்குப் பின் கூட்டம் இனிதே முடிவுற்றது.

பொதுச்செயலாளரின் சீரிய செயல்பாடு மற்றும் அனைத்து திட்ட செயலாளர்கள், மாநில நிர்வாகிகளின் ஒத்துழைப்பால்தான் இந்த வெற்றி நமது வசமானது.